වාර්ෂික කාර්යසාධන හා ගිණුම් වාර්තාව

வருடாந்த செயலாற்றுகை மற்றும் நிதியறிக்கைகள்

2021

Annual Performances & Financial Reports

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය කිලිනොච්චි

மாவட்ட செயலகம் கிளிநொச்சி

District Secretariat Kilinochchi

உள்ளடக்கம்

01 நிறுவனத்தின் விபரம்

1.1. கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் அறிமுகம் 01

1.1.1. நிர்வாக எல்லைகள் 01

1.1.2. வரலாற்று முக்கியத்துவங்கள் 01

1.1.3. இயற்கை வளங்கள் 02

1.1.4. வர்த்தக பொருளாதார செயற்பாடுகள் 02

1.2. மாவட்ட செயலகத்தின் தொலை நோக்கு செயற்பணி பெறுமதிகள் 03

1.2.1. மாவட்ட செயலகத்தின் குறிக்கோள் 04

1.3. மாவட்ட செயலகத்தின் பிரதான செயற்பாடுகள் 05

1.4. மாவட்ட செயலக அமைப்பு வரைபடம் 06

1.5. பிரதேச செயலகங்கள் கிராம அலுவலர் பிரிவு விபரங்கள் 07

1.5.1. சனத்தொகை பற்றிய தகவல் 07

1.5.2. அடிப்படைத்தகவல்கள் 07

02 முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம் 08-36

2.1 சிறப்பு அடைவுகள் மற்றும் சவால்கள் 37-38

03 டிசம்பர் 31 முடிவுற்ற வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச்செயலாற்றுகை

3.1 நிதிச்செயலாற்றுகை பற்றிய கூற்று 39

3.2 நிதி நிலமை பற்றிய கூற்று 40

3.3 காசுப்பாய்ச்சல் கூற்று 41

3.4 நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் 42-76

3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை 77

3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை 78

3.7 நி.பி குறிப்பு 208 பிரகாரம் செலவினத்திற்கான ஒதுக்கீடு 78-85

3.8 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை **86**

3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 87-106

04 செயலாற்றுகைச் சுட்டிகள் 107

4.1. நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் **107**

05 பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் 108

5.1 அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் 109-113

5.2. பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்கள் **113**

06 மனித வள விபரம் 113

6.1. பதவியணி முகாமைத்துவம் 113

6.2. பற்றாக்குறையான மனித வளங்கள் 113

6.3. மனித வள அபிவிருத்தி **114-117**


07 இணக்கப்பாட்டு அறிக்கை 117-126

1.நிறுவனத்தின் விபரம்

1.1கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் அறிமுகம்

1.1.1 நிர்வாக எல்லைகள்

வடமாகாணத்தின் மத்தியில் அமைந்திருக்கும் கிளிநொச்சி மாவட்டமானது வடக்கு எல்லையாக யாழ் மாவட்டமும், கிழக்கு தெற்கு எல்லைகளாக முல்லைத்தீவு மாவட்டமும், மேற்கு தெற்கு எல்லைகளாக மன்னார் மாவட்டத்தையும் கொண்டு விளங்குகிறது.



1.1.2 வரலாற்று முக்கியத்துவங்கள்

இலங்கையின் முதலாவது மனிதக் குடியிருப்பின் தொடக்கப் புள்ளியாக இரணைமடு அடையாளப்படுத்தப்பட்டதன் மூலம் கிளிநொச்சி மாவட்டத்தினது வரலாற்று தொன்மை ஆரம்பமாகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்துடன் இணைந்து காணப்பட்ட கிளிநொச்சிப் பிரதேசம் புதிய மாவட்டம் ஒன்றாக 1984ம் ஆண்டு நிறுவப்பட்டது. அக்காலத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் வாழ்ந்த மக்கள் விவசாயம், வேட்டைத்தொழில். மீன்பிடி, கால்நடை வளர்ப்பு ஆகிய தொழில்களை மேற்கொண்டதுடன் அவற்றை சேமிக்கும் பழக்கங்களையும் கொண்டிருந்தனர்.

இம் மாவட்டத்தில் காணப்படுகின்ற இரணைமடுக்குளம் உட்பட நான்கு பாரிய நீர்ப்பாசனக் குளங்களும் ஐந்து நடுத்தர நீர்ப்பாசன குளங்களும் 394 சிறிய நீர்ப்பாசன குளங்களும் இம் மாவட்டத்தில் அமைந்துள்ளமை மக்களின் தொழில் முறையை எடுத்தியம்புகிறது. மேலும் தொழில் நுட்பமும் கலைநயமும் பொருந்திய மக்கள் இங்கு வாழ்ந்ததாக நம்பப்படுகிறது.

இம்மாவட்டத்தின் வரலாற்று பெருமைகளாக உருத்திரபுரம் சிவன் கோயில், புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயம், மண்ணித்தலை புனித அந்தோனியார் ஆலயம், பாலைதீவு புனித

அந்தோனியார் தேவாலயம், பொன்னாவெளி சிவன் ஆலயம் என்பவற்றுடன் பூநகரி ஒல்லாந்தர் கோட்டையும் காணப்படுகின்றது.

1.1.3 இயற்கை வளங்கள்

இயற்கை வளங்களாக இரணைமடுக்குளம், சுண்டிக்குளம் பறவைகள் சரணாலயம், வன்னேரிக்குளம் பறவைகள் சரணாலயம் மற்றும் கௌதாரிமுனை கடற்கரை என்பவை விளங்குகின்றன.

1.1.4 வர்த்தக பொருளாதார செயற்பாடுகள்

கிளிநொச்சி மாவட்ட மக்களின் பெரும்பாலானவர்கள் நெற்செய்கையுடன் உப உணவுப்பயிர்ச்செய்கை மற்றும் கால்நடை வளர்ப்பு, பழமரச் செய்கை, மீன்பிடித்தொழில் என்பவற்றை மேற்கொள்கின்றனர்.

1.2 மாவட்ட செயலகத்தின் தொலைநோக்கு செயற்பணி பெறுமதிகள்

தூரநோக்கு

நவீன மயப்படுத்தப்பட்ட மாவட்ட நிர்வாகத்தினூடாக பயனுறுதி மிக்க மக்கள் சேவையை வழங்கல்

செயற்பணி

அரச கொள்கைகளுக்கு அமைவாக வினைத் திறனைப் பயன்படுத்தி சிறந்த ஒருங்கிணைப்பின் மூலம் மாவட்டத்தின் அபிவிருத்தி மற்றும் சமூக பண்பாட்டு விழுமியங்களை உயர்த்துதல்

பெறுமதிகள்

1..பாகுபாடற்ற நேர்மையான பயனுறுதிமிக்க விரைவான மக்கள் சேவையை வழங்கல்

2. ஒரே பதவி நிலையில் உள்ள ஊழியர்கள் சமமாக மதிக்கப்படுவதுடன், ஊழியர்களின் நலன்சார் விடயங்களுக்கு முன்னுரிமை அளித்தல்

3. சூழல்நட்பு அணுகு முறைகளைப் பயன்படுத்துதல்

4. மாற்று வலுவுள்ளோர், முதியோருக்கான கண்ணியமான சேவையினை வழங்கல்

5. அலுவலகத்தில் பின்பற்றப்படும் கோட்பாடுகள் மற்றும் நெறிமுறைகளை ஊழியர்கள் அனைவரும் பின்பற்றுதல்

6. நவீன இலத்திரனியல் முறைமையினூடாக பொதுமக்களிற்கு இலகுவான சேவை வழங்கல்

1.2.1 மாவட்ட செயலகத்தின் நோக்கங்கள்

- தரவுகளை இலத்திரனியல் மயப்படுத் துதலினூடாக இலகுவான மக்கள் சேவையினை முன்னெடுத்தல்
- வினைத்திறனான வளப் பயன்பாடு
- சேவை பெறுநர் மற்றும் வளங்களி னுடைய உற்பத்தித் திறனை உச்ச மட்டத்திற்கு கொண்டு செல்லல்
- சூழல்நேய உற்பத்திப் பொருட்களைப் பயன்படுத்துதல்
- மக்களுக்கு இலகுவானதும் வினைத்தி றனானதுமான சேவையை வழங்கக் கூடிய வகையில் அலுவலகத்தை ஈர்ப்பு மற்றும் தக்க வைத்தல் நிலைக்கு கொண்டுவருதல்
- மாவட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை தேசிய வாழ்க்கைத்தர மட்டத்திற்கு சமமாக உயர்த்துதல்
- சமூர்த்தி அடிப்படைக் கட்டுமான விருத்தி, தொழில் வாய்ப்பு போன்ற செயற்திட்டங்களின் ஊடாக வறுமையினைக் கணிசமான அளவு குறைத்தல்
- வாழ்வாதார உதவிகள் மூலம் நிலைபேறான வருமான மட்டத்தை உறுதிப்படுத்தல்
- நிறுவனத்திற்கான மாற்ற முகாமைத்து வத்தினைக் கட்டியெழுப்புதல்
- நிறுவனத்தின் நிலைத்திருப்பு வளர்ச்சியினை அடைந்துகொள்ளல்
- பேண்தகு அபிவிருத்தி மட்டத்தை தொடர்ச்சியாக உறுதிப்படுத்துதல்

1. 3 மாவட்ட செயலகத்தின் பிரதான செயற்பாடுகள்

வினைத்திறனான மாவட்ட நிர்வாக முறைமை

- மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்களிற்கான கணினி வலை யமைப்புக்களை ஏற்படுத்தல், உள்ளக கணினி வலையமைப்பு முறை களையும், வெளியக வலையமைப்புக் களையும் ஏற்படுத்தல்
- உத்தியோகத்தர்கள் தொடர்பான தனிநபர் கோவை பேணல், சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள், புகையிரத ஆணைச்சீட்டுகள் வழங்கல், உத்தியோகத்தர்களின் பதவிகளிற்கு தேவையான பயிற்சிகளை வழங்கல்.
- ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களிற்கான ஓய்வூதிய கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்


தூய பொதுச் சேவைகளை கிராம, பிரதேச மற்றும் மாவட்ட பொதுமக்களிற்கு வழங்குவதும், வழங்கப்படுவதை உறுதிப்படுத்தலும்

- அடையாள அட்டைகள் மோட்டார் வாகன வரி வியாபார அனுமதிப் பத்திரங்கள் வழங்கல்.
- பிறப்பு திருமண மற்றும் இறப்பு பதிவுகளை தாமதமின்றி மேற் கொள்வதும் அவற்றின் பிரதிகளை வழங்குதலும்.
- சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கல்
- காணி அனுமதிப்பத்திரம் வழங்கு வதற்கான ஒழுங்குகளை மேற் கொள்ளலும், காணிப்பிரச்சனைகளை தீர்த்து வைத்தலும்
- கலாச்சார விழுமியங்கள் மற்றும் உடல் உளசார் நலம் பேணல்.
- கலை கலாச்சார விழாக்களை நடாத்துதல், கலை கலாச்சாரம் சம்பந்தமான போட்டிகளை நடாத்துதல்.
- கலாச்சாரம் சம்பந்தமான விளையாட்டு நிகழ்வுகளை நடாத்துதல்.
- மாவட்ட விளையாட்டு நிகழ்வுகள், மாற்றுத் திறனாளிகளிற்கான விளையாட்டு நிகழ்வுகள் நடாத்துதல்
- சிறந்த பிரஜைகளை உருவாக்குவதற்கு ஏதுவான வகையில் சிறுவர்கள் இளைஞர்களிற்கான விழிப்புணர்வு கருத்தரங்குகளை நடாத்துதல், உளவள மேம்பாட்டிற்கான கருத்தரங்குகள் நடாத்துதல்.

கிராம பிரதேச மட்டத்தில் உள்ள மக்களின் கல்வி சுகாதாரம் விவசாயம் போன்றவற்றிற்கு உதவுவதுடன் வறுமைக் கோட்டிற்குட்பட்டவர்களிற்கு நிவாரணங்களும் வாழ்வாதார உதவிகளும் வழங்கல்.

- பெண் தலைமைத்துவ குடும்பங்களிற்கு சுயதொழில் பயிற்சிகளை வழங்கலும் ஊக்குவிப்புக்களை வழங்கலும்
- முதியோர்களிற்கும் மாற்றுத்திறனாளிகளிற்கும் சில விசேட நோய்உடையோருக்குமான கொடுப்பனவுகள் மேற்கொள்ளல்
- அனர்த்த முகாமைத்துவ சேவை பிரிவினால் கிராமிய மட்டங்களில் திடீர் அனர்த்தம் சம்பந்தமான விழிப்புனர்வு கருத்தரங்குகளை நடாத்தல் உடனுக்குடன் அனர்த்த நிவாரண சேவைகளை மேற்கொள்ளல்.
- வாக்காளர் பதிவுகளை மேற்கொள்ளலும், தேர்தல் ஒருங்கிணைப்பும்.
- விவசாயிகளிற்கான விதைகள், உள்ளீடுகள் விவசாய உபகரணங்கள் பெற்றுக் கொடுத்தல்.
- வீதி அபிவிருத்தி நீர்ப்பாசன மின்சார வசதிகளை ஒழுங்கமைத்தல், வீடமைப்பு திட்டங்களை நெறிப்படுத்தலும், யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களிற்கான இழப்பீட்டுத் தொகை வழங்கல் மற்றும் மாவட்டத்தின் அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளையும் ஒழுங்கமைத்து வழிப்படுத்தல்.

1.4 மாவட்ட செயலக அமைப்பு வரைபடம்



1.5 பிரதேச செயலகங்கள். கிராம அலுவலர் பிரிவு விபரங்கள்

பிரதேச செயலர் பிரிவு	கிராம அலுவலர் பிரிவு
கரைச்சி	42
கண்டாவளை	16
பூநகரி	19
பச்சிலைப்பள்ளி	18

1.5.1 சனத்தொகை பற்றிய தகவல்

தொ. இல	பிரதேச செயலகங்கள்	குடும்பங்கள்	உறுப்பினர்கள்	ஆண்	பெண்	தமிழர்	சிங்களவர்	முஸ்லீம்
1	கரைச்சி	26389	78376	37848	40528	77422	93	861
2	கண்டாவளை	9042	26994	13095	13899	26967	2	25
3	பூநகரி	8228	27288	13646	13642	25568	8	1712
4	பச்சிலைப்பள்ளி	4727	14684	7202	7482	14632	25	27
		48386	**147342**	**71791**	**75551**	**144589**	**128**	**2625**

1.5.2 அடிப்படைத்தகவல்கள்

மாவட்டம்	கிளிநொச்சி
மாகாணம்	வடக்கு
மொத்தப்பரப்பளவு	1279 sqkm
பிரதேச செயலகங்களின் எண்ணிக்கை	04
கிராம அலுவலர் பிரிவுஎண்ணிக்கை	95
கிராமங்களின் எண்ணிக்கை	354
வாக்கெடுப்பு நிலையங்கள்	107
பிரதேச சபைகளின் எண்ணிக்கை	03
வலயக்கல்விப்பணிமனைகள்	02
பாடசாலைகளின் எண்ணிக்கை	104
மாணவர்களின் எண்ணிக்கை	31941
ஆசிரியர்களின் எண்ணிக்கை	2056
சனத்தொகை	147342

02. முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

➢ கிராம அபிவிருத்தி திணைக்கள செயற்பாடுகள்

வடமாகாண சபையின் கீழ் இயங்கும் கிளிநொச்சி மாவட்ட கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் செயற்பாடுகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிட முடியும்.

கிளிநொச்சி மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலர் பிரிவிலும் 173 கிராம அபிவிருத்திச் சங்கங்களும், 99 மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களும் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகின்றன. இவை அனைத்தும் கிராம மட்டத்தில் சிறப்பாக இயங்கும் சமூக மட்ட அமைப்பாக உள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் வேலைவாய்ப்பற்றிருக்கும் கிராமப்புற யுவதிகளை சுயதொழிலில் ஊக்குவிக்கும் முகமாகவும், பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தி வேலைவாய்ப்பை பெற்றுக் கொள்ள முடியாமல் இருக்கும் பெண்களுக்கும் உதவும் நோக்குடன் மகளிர் அபிவிருத்தி நிலையத்தினை நிறுவி மகளிர் அபிவிருத்தி நிலைய போதனாசிரியர் ஊடாக கிராமத்தில் பெண்கள் சார்பான பல தரப்பட்ட ஆடை வடிவமைத்தல், கைவேலை, மனைப்பொருளியல், அழகியல் பயிற்சிகளை வழங்கி வருகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இயங்கும் மகளிர் அபிவிருத்தி நிலையங்களில் தலா 20 மாணவர்கள் வீதம் 80 மாணவர்கள் பயிற்சி பெற்று வெளியேறியுள்ளனர். இவர்களுக்கு 12 மாத காலத்தினைக் கொண்ட மனைப்பொருளியல் டிப்ளோமா பாடத்திட்டம் எனும் அடிப்படையில் பயிற்சிகள் வழங்கப்பட்டன. ஒவ்வொரு மாணவர்களுக்கும் நாள் ஒன்றுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவாக ரூபா 200 வழங்கப்படுகின்றது. பயிற்சியின் முடிவில் அனைத்து பிரதேச செயலக பிரிவிலும் பரீட்சைகள் நடாத்தப்பட்டு, இறுதியாக கண்காட்சியும் பிரதேச, மாகாண மட்டத்தில் நடாத்தப்படுகின்றது.

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் இணையத்தகவல் முறைமை மூலம் தேவையான விடயங்களை பெற்றுக்கொள்ள வசதி ஏற்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

* பிரதேச ரீதியாக தரவேற்றம்தொடர்பு கொள்வதற்கான விபரங்கள்
* பதிவு செய்யப்பட்ட சங்கங்கள்
* பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் நிர்வாக விபரங்கள்
* பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் சொத்து விபரம்.
* சங்கங்கள் மற்றும் சங்க அங்கத்தவர்களின் தரமான உற்பத்திகள் தொடர்பான விபரம்.
* திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கிராம மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் பதிவு இலக்க விபரங்கள்.
* தரவிறக்கம் செய்யக்கூடிய வசதி.
* யாப்பு விதிகள்.
* பயிற்சி விண்ணப்பங்கள்.
* பதிவுச் சான்றிதழ்.
* திணைக்கள சுற்று நிருபங்கள்

பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள்

வேலைத்திட்டங்கள்	ஒதுக்கீடு ரூபா	செலவு ரூபா
புதிய கட்டிடம் அமைத்தல்	2000000	1985275
பாலம் அமைத்தல்	700000	678436
அரைக்கும் ஆலை	500000	493874
மொத்தம்	**3200000**	**3157586**

➢ நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம்

திணைக்களமானது மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கி வருவதுடன் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் தோறும் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்களை நியமித்துள்ளது. இந்நியமனமானது எல்லா சிறுவர்களுக்கும் சமமான சந்தர்ப்பத்தை வழங்குவது விசேடமாக அனாதரவாக்கப்பட்ட கைவிடப்பட்ட மற்றும் சட்டத்துடன் முரண்பட்ட சிறுவர்களுக்கான பாதுகாப்பு மற்றும் பராமரிப்பை வழங்குவதாகும். 2021ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்கள் வருமாறு.

இல	நிகழ்ச்சித்திட்டம்	நிகழ்ச்சித்திட்ட விபரம்	செலவுத் தொகை ரூபா
1	கல்வி உதவி 24 சிறுவர்கள்	பொருளாதார சிக்கல்களுக்கு உள்ளாகி பாடசாலைக்கல்வியை இடையில் நிறுத்திய மாணவர்களுக்கு மற்றும் ஒழுங்கற்ற வரவுடைய மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் வழங்கி மீளிணைத்தல்	24000
2	மருத்துவ உதவி 15 சிறுவர்கள்	நோயினால் பாதிக்கப்பட்டு பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள சிறுவர்களுக்கு சிகிச்சைக்கான உதவி	75000
3	இரட்டைக் குழந்தைகளுக்கான கொடுப்பனவு 12 சிறுவர்கள்	இரட்டைக்குழந்தைகளை பெற்றெடுத்து பொருளாதார நிலையில் பின்தங்கி வாழும் குடும்பங்களுக்கான கொடுப்பனவு	45000
4	மாவட்ட மற்றும் பிரதேச சிறுவர்சபை கலந்துரையாடல் 5 கலந்துரையாடல்	சிறுவர்களின் பங்குபற்றுதல் ஊடான அவர்களது திறனை மேம்படுத்தல்	12500
5	மாற்றுத்திறனாளி சிறுவர்களுக்கான கொடுப்பனவு	மாவட்ட சிறுவர்சபையிலுள்ள மாற்றுத்திறனாளி சிறுவர்களின் சிறப்பான பங்குபற்றுதலை ஊக்குவிப்பதற்கான 2 மாற்றுத்திறனாளி சிறுவர்களுக்கான கொடுப்பனவு	5000
6	உலக சிறுவர்தின நிகழ்வு	உலக சிறுவர்தின நிகழ்வை முன்னிட்டு விழிப்புணர்வுபதாகைகள் காட்சிப்படுத்தல்	15000
7	சிறுவர்கழக தொண்டர்களுக்கான பயிற்சிநெறி	சிறுவர்கழக செயற்பாடுகளை முன்னெடுத்து வழிகாட்டியாக செயற்படும் தொண்டர்களுக்கான திறன்விருத்தி பயிற்சியினை வழங்கும் நிகழ்வு	20000
8	சிறுவர்மைய ஆய்வு	சிறுவர்நேய சமூகச் சூழலை உருவாக்குவதற்காக சிறுவர்களை வலுவூட்டும் செயற்திட்டம்	24500

9	சஞ்சிகை உருவாக்கம் 415 சிறுவர்கள் பங்களிப்பு	சிறுவர்கழக சிறுவர்களின் ஆக்கங்கள் அடங்கிய சஞ்சிகை தயாரித்தல்	25000
10	இணையத்தள பாவனையிலிருந்து பாதுகாப்பு 4 நிகழ்வுகள்	இணையத்தளங்களை சரியான முறையில்பாவிப்பதன் மூலம் சிறுவர்களை பாதுகாக்கும் செயற்திட்டம்	20000
11	சமூக பராமரிப்புத் திட்டம்	பொருளாதார நிலையில் பின்தங்கியிருக்கும் குடும்பங்களின் பிள்ளைகளை தொடர்ச்சியான கல்வியைப்பெற நிதிஉதவி மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்குதல்	252000
12	மாதாந்த கலந்துரையாடல் 6 நிகழ்வு	பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் மாதாந்த வேலைத்திட்ட முன்னேற்ற மீளாய்வுக்கலந்துரையாடல்	7500
13	சிறுவர் அபிவிருத்திக்குழு கலந்துரையாடல்	பிரதேச சிறுவர் அபிவிருத்திக்குழு கலந்துரையாடல்	8000
14	சிறுவர் அபிவிருத்திக்குழு கலந்துரையாடல்	மாவட்ட சிறுவர் அபிவிருத்திக்குழு கலந்துரையாடல்	3500
	மொத்தம்		536100

- **தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை**

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் 2021ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள்:

1. மீனவ கிராமங்களில் சிறுவர் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நிகழ்ச்சி திட்டம்

   கண்டாவளை 01 27850

2. நலிவுற்ற மாணவர்களுக்கான கல்வி உபகரணங்கள் வழங்கல்

   கரைச்சி 01 30000

3. மாவட்ட மற்றும் பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல்

   கரைச்சி, பூநகரி,பச்சிலைப்பள்ளி 11 7000

4 பாடசாலை மாணவர்களுக்கான ஊடக கழக தேசிய நிகழ்ச்சித்திட்டம்

   கரைச்சி, கண்டாவளை 01 20000

5. புலம்பெயர் ஊழியர்களின் பிள்ளைகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டம்

   கரைச்சி 01 20000

➢ முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி

முன்பிள்ளை பருவம் என்பது கர்ப்பத்தில் உருவாகும் குழந்தையின் காலப் பகுதியில் இருந்து 5 வயது வரையான காலப் பகுதியாகும்.

முன்பிள்ளை பருவ அபிவிருத்தி என்பது சிறுவர்களின் பௌதீக, மனவெழுச்சி, சமூக, மற்றும் அறிவு வளர்ச்சி என்பவற்றில் ஒன்று குவிந்த ஒரு முழுமையான அணுகுமுறையை வலியுறுத்துவதாகும்.

இதன் நோக்கம் சிறுவர்களை உடல், உள விருத்தி மற்றும் தெளிவான மனநிலையுடனும் நல்ல பழக்கவழக்கத்துடனும் பாடசாலை செல்வதற்கான சுபாவநிலைக்கு அவர்களை தயார்படுத்தல் ஆகும். பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் சிறுவர் செயலகத்தால் நாடு முழுவதும் உள்ள சிறுவர்களை கருத்திற் கொண்டு, பின்வரும் செயற்பாடுகளை அமுல்படுத்தி வருகின்றன.

பிரதான செயற்பாடுகள்:

- முன்பள்ளி சிறுவர்களுக்கு போசாக்கு மிக்க காலை உணவு வழங்குதல்
- கர்ப்பிணித் தாய்மார்களுக்கான ரூ.20000 பெறுமதியான போசாக்கு பொதி (10 மாதங்களுக்கு) வழங்குதல்.
- சிறுவர் மற்றும் சிறுமியர்களுக்கு எதிரான துஸ்பிரயோகங்கள் மற்றும் வன்முறைகளில் இருந்து முற்பாதுகாப்பளித்தல்.
- சம்பளம் பெறாத முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மாதாந்த கொடுப்பனவு உதவித் தொகை ரூ.2500 வழங்குதல்.
- உலக சிறுவர் தினம் மற்றும் பிள்ளை நேய சூழல் உருவாக்கும் நிகழ்ச்சி திட்டங்களை அமுல்படுத்துதல்.
- முன்பிள்ளை பருவ பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் முன்பள்ளிகளை சிறப்பாக நிர்மாணம் செய்தல். (உலக வங்கியின் 5 வருட திட்டம்)

இல	அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சி	பௌதீகம் முன்னேற்றம்	ஒதுக்கீடு ரூபா	செலவீனம் ரூபா	மிகுதி ரூபா
01	கர்ப்பிணித் தாய்மார்களுக்கான ரூ.20000 பெறுமதியான சத்துணவுப் பொதி வழங்குதல்	100	43050000	42828400	221600
02	முன்பள்ளிச் சிறுவர்களுக்கு காலை உணவு வழங்குதல் திட்டம்	100	13498380	7001770	6496610
03	முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ரூ.2500 மாதாந்த கொடுப்பனவு வழங்குதல்	100	652500	647500	5000
04	கர்ப்பிணிகளுக்கு பிரசவ பொதி வழங்குதல்	100	80000	80000	00
	மொத்தம்		**57280880**	**50557670**	**6723210**







➢ சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் செயற்பாடுகள்

இளைஞர் யுவதிகளின் வியாபார இயலுமை மற்றும் பயன்தரு தன்மையினை விருத்தி செய்வதன் மூலம் தொழில் நிர்மானத்தினை அதிகரித்து வருமான மட்டத்தினை உயர்த்தி நாட்டின் பொருளாதார துறையில் முயற்சியாளர்களின் உச்சவாய்ப்பினை பெற்றுக்கொள்ளும் முகமாக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப்பிரிவு பல திட்டங்களை செயற்படுத்தி வருகின்றது. அவ்வகையில் வணிக வாய்ப்புக்களினை அடையாளம் காணுதல், வணிகப்பிரச்சினைக்கு தீர்வு காணுதல், சந்தை வாய்ப்புக்களினை அடையாளம் காணுதல், தொழில்நுட்ப பயிற்சி வழங்குதல் மற்றும் வணிகத்தினை விருத்தி செய்தல் தொடர்பாக தொழில் முயற்சியாளர்களின் நலன்சார்ந்த பல திட்டங்கள் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவினரால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

பயிற்சி நெறிகள் தொடர்பான விபரம் - 2021

இல	பயிற்சி நெறிகள் தொடர்பான விபரம்	பிரதேச செயலக பிரிவு	பயனாளிகள் எண்ணிக்கை	செலவு
1.	வியாபாரம் தொடர்பான விழிப்புணர்வும் மனவிருத்தியும்	கரைச்சி	31	1950
2..	வியாபாரம் தொடர்பான விழிப்புணர்வும் மனவிருத்தியும்	கண்டாவளை	25	1950
3.	வியாபாரம் தொடர்பான விழிப்புணர்வும் மனவிருத்தியும்	பளை	25	1950
4.	வியாபாரம் தொடர்பான விழிப்புணர்வும் மனவிருத்தியும்	பூநகரி	30	1950
5.	கணக்கு பதிவு	கண்டாவளை	20	5200
6.	செலவு மதிப்பீட்டு முகாமைத்துவம்	கண்டாவளை	20	5200
7.	வியாபாரத்திட்டங்களை அடையாளம் காணுதல்	கரைச்சி	25	3200
8.	வியாபாரத்திட்டங்களை அடையாளம் காணுதல்	பூநகரி	26	8350
9.	முயற்சியான்மை அபிவிருத்தி நிகழ்ச்சிததிட்டம்	கரைச்சி	68	5400
10	முயற்சியான்மை அபிவிருத்தி நிகழ்ச்சிததிட்டம்	பளை	66	7900
11.	பிரதேச செயலக விற்பனைக் கண்காட்சி	கரைச்சி	60	40300
12.	பிரதேச செயலக விற்பனைக் கண்காட்சி	கண்டாவளை	25	32600
13.	பிரதேச செயலக விற்பனைக் கண்காட்சி	பளை	20	31400

14.	பிரதேச செயலக விற்பனைக் கண்காட்சி	பூநகரி	20	30700
15.	சமூர்த்தி வலுவூட்டல் வேலைத்திட்டம்	கரைச்சி	105	12000
16.	சமூர்த்தி வலுவூட்டல் வேலைத்திட்டம்	கண்டாவளை	12	2540
17.	சமூர்த்தி வலுவூட்டல் வேலைத்திட்டம்	பூநகரி	16	2570
18.	சமூர்த்தி வலுவூட்டல் வேலைத்திட்டம்	பளை	49	5630
19.	சமூர்த்தி பயனாளிகளுக்கான முயற்சியாண்மை ஊக்குவித்தல் வேலைத்திட்டம்	பூநகரி	16	3030
20.	சமூர்த்தி பயனாளிகளுக்கான முயற்சியாண்மை ஊக்குவித்தல் வேலைத்திட்டம்	பளை	49	6340
21.	சமூர்த்தி பயனாளிகளுக்கான முயற்சியாண்மை ஊக்குவித்தல் வேலைத்திட்டம்	கரைச்சி	35	4700
22.	சமூர்த்தி பயனாளிகளுக்கான முயற்சியாண்மை ஊக்குவித்தல் வேலைத்திட்டம்	கரைச்சி	35	4700
23.	சமூர்த்தி பயனாளிகளுக்கான முயற்சியாண்மை ஊக்குவித்தல் வேலைத்திட்டம்	கரைச்சி	15	3084
24.	சமூர்த்தி பயனாளிகளுக்கான வியாபாரத்திட்டம் தயாரித்தல்	பூநகரி	16	6060

25.	சமூர்த்தி பயனாளிகளுக்கான வியாபாரத்திட்டம் தயாரித்தல்	பளை	49	13660
26.	சமூர்த்தி பயனாளிகளுக்கான வியாபாரத்திட்டம் தயாரித்தல்	கரைச்சி	35	14400
27.	சமூர்த்தி பயனாளிகளுக்கான வியாபாரத்திட்டம் தயாரித்தல்	கரைச்சி	35	14400
28.	சமூர்த்தி பயனாளிகளுக்கான வியாபாரத்திட்டம் தயாரித்தல்	கண்டாவளை	15	5284
29.	தொழில்நுட்ப பயிற்சி நெறி	பூநகரி	20	6190
30.	தொழில்நுட்ப பயிற்சி நெறி	பளை	20	7660
31.	தொழில்நுட்ப பயிற்சி நெறி	கரைச்சி	20	6260
32.	தொழில்நுட்ப பயிற்சி நெறி	கண்டாவளை	20	8290
33.	சந்தைப்படுத்தல் ஊக்குவித்தல் நிகழ்ச்சித்திட்டம்.	பளை	10	6200
34.	சந்தைப்படுத்தல் ஊக்குவித்தல் நிகழ்ச்சித்திட்டம்.	கண்டாவளை	10	7200







➢ உள்ளக கணக்காய்வுக் கிளைசெயற்பாடுகள்

உள்ளகக்கணக்காய்வுக் கிளை மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளையும் அதனுடன் தொடர்புடைய செயற்பாடுகளின் வினைத்திறன்களையும் விருத்தி செய்து கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

உள்ளகக் கணக்காய்வுக் கிளையினால் இவ்வருடம் மேம்படுத்தப்பட்ட ஆண்டுக்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டதுடன் மாதந்தோறும் ஆண்டிற்கான வேலைத்திட்டத்திற்கமைவாக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்கமைவாக மாதாந்த முன்நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2021ம் வருடத்தில் மொத்தமாக பதினெட்டு கணக்காய்வு அவதானிப்புக்கள் அனுப்பப்பட்டன. பதினெட்டு அவதானிப்புக்களுக்கான பதில்கள் உரிய காலத்தில் கிடைக்கப் பெற்றதுடன் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் இவ்வருடம் வினைத்திறனாகக் காணப்பட்டுள்ளது.

கணக்காய்வு அவதானிப்புக்கள் பற்றிய விபரங்கள் வருமாறு:

விடயம்	மாவட்டச் செயலகம்	பிரதேசசெயலகம்				மொத்தம்
		கரைச்சி	கண்டாவளை	பச்சிலைப்பள்ளி	பூநகரி	
அவதானிப்புக்கள்	04	04	04	03	03	18
பதில்கள்	04	04	04	03	03	18
கிடைக்கப் பெறாத பதில்கள்	-	-	-	-	-	-

மேலும் அவதானிப்புக்களின் பிரதிகள் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கும் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கும் தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கும் மாவட்டச் செயலகத்தின் பிரதம கணக்காளருக்கும்அனுப்பிவைக்கப்படுகின்றது.

உள்ளகக் கணக்காய்வுகளில் தோன்றிய பிரச்சனைகளைத் தீர்வுசெய்யும் முகமாக வருடத்தில் மூன்று கணக்காய்வு முகாமைத்துவக் கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டது. முதலாவது கூட்டம் 2020ம் வருடத்தின் 4ம் காலாண்டிற்கானதும் ஏனைய இரண்டு கூட்டங்களும் 2021ம் வருடத்திற்குமானது ஆகும். இவ்வருடத்திற்கான கூட்டங்களில் முதலாவது மற்றும் மூன்றாவது கூட்டத்தில் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளரும் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் உள்ளகக்

கணக்காய்வாளரும் இரண்டாவது கூட்டத்தில் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் Online மூலமும் (Zoom) பங்குபற்றியுள்ளார்கள்.

கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம்	முதலாம் காலாண்டு-2021	இரண்டாம் காலாண்டு-2021	மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டு-2021
மாவட்டச் செயலகம் கிளிநொச்சி	10.02.2021	06.08.2021	22.12.2021
பிரதேசசெயலகம் - கரைச்சி	21.01.2021	29.04.2021	09.11.2021
பிரதேசசெயலகம் - கண்டாவளை	02.02.2021	30.04.2021	17.11.2021
பிரதேசசெயலகம் - பச்சிலைப்பள்ளி	22.01.2021	22.04.2021	17.11.2021
பிரதேசசெயலகம் - பூநகரி	02.02.2021	04.05.2021	23.11.2021

மேலும் பிரதேச செயலகங்களில் உள்ளகக் கணக்காய்வுக் கிளை ஸ்தாபிக்கப்பட்டு முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கமைவாக கணக்காய்வு செயற்பாடுகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்களால் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் செயற்திட்டங்களை பார்வையிட்டு அவற்றின் வினைத்திறன் பற்றிய அறிக்கைகள் அரசாங்க அதிபருக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டங்களில் பின்வரும் விடயங்கள் முறைமைகளினை பலப்படுத்தும் முகமாகவும் ஆபத்துக்களை தவிர்க்கும் முகமாகவும் கலந்துரையாடப்பட்டது.

- உள்ளகக் கட்டுப்பாடும் ஆபத்தும்
- உள்ளகக் கணக்காய்வுஅவதானிப்பும் சீர்செய்தலும்
- கள விஜயம் தொடர்பானஅவதானிப்புக்கள்
- தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் ஐயவினாக்கள் மீள்பரிசீலனைசெய்தல்
- கடந்தகால அரச கணக்கு குழுவின் கூட்ட அறிக்கை மீதான செயற்பாட்டு முன்னேற்றம்.

➢ காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் செயற்பாடுகள்

திணைக்களத்தின் நோக்கு நாட்டின் நிலவளத்தை சிறப்பாக பயன்படுத்துவதற்கு ஊக்கமளிப்பதாகும். இந்த நோக்கை அடைவதற்கு வேண்டிய பல பணிகளை திணைக்களம் மாவட்ட மற்றும் பிரதேச ரீதியாக மேற்கொண்டு வருகின்றது.

தொ. இல	நிகழ்வுகள்	இடம்	நிதி ஒதுக்கீடு ரூபா	செலவு ரூபா	சதவீத அடைவு	பயனடைந்த இலக்குக்குழு
01.	பயன்படுத்தக்கூடிய ஆனால் பயன்படுத்தப்படாத காணிகள் மற்றும் குறைந்த பயன்பாட்டு காணிகளை அடையாளம் காணுதல்	கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேச செயலக பிரிவுகள்	60,000	60,000	100%	
02.	மண் மற்றும் நீர் பாதுகாப்பு ஊடாக குறைந்த பயன்பாட்டு விவசாய நிலங்களில் விளைவுதிறனை அதிகரித்தல்	கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேச செயலக பிரிவுகள்	400,000	399,986	99.99%	தெரிவு செய்யப்பட்ட வீட்டுத்தோட்ட பயனாளிகள்.
03.	தெரிவுசெய்யப்பட்ட கிராமிய காணிப்பயன்பாட்டு திட்டங்களில் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல்	பூநகரி பிரதேச செயலக பிரிவு	209,000	208,862.20	99.93%	தெரிவு செய்யப்பட்ட வீட்டுத்தோட்ட பயனாளிகள்.
04.	மாவட்ட வலயமாக்கல் வேலைத்திட்டம்	மாவட்ட அலுவலகம் மற்றும் கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேச செயலக பிரிவுகள்	50,000	47,614.60	95.22%	

05.	ஏனைய அரச காடுகளை அடையாளப்படுத்தல் வேலைத்திட்டம்	கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேச செயலக பிரிவுகள்	47,000	47,000	100%	
06.	இளம் தொழில் முனைவோரை ஊக்குவிப்பதற்காக அரச காணிகளில் முதலீட்டு வாய்ப்புக்களை வழங்கும் திட்டம்	கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேச செயலக பிரிவுகள	245,900	231,186	94%	காணிக் கோரிக்கையாளர்கள் - இளம்தொழில் முனைவோர்
07.	அரச தொழில் முயற்சிகளுக்குரிய பயன்படுத்தாத காணிகள் மற்றும் சொத்துக்களை அடையாளம் காணுதல் மற்றும் தகவுதிறன் நிருணயித்தல்.	கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேச செயலக பிரிவுகள	10,000	10,000	100%	
08.	மாவட்ட மட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழுக் கூட்டம்	மாவட்ட செயலகம்	13,500	13,400	99.25%	காணிக் கோரிக்கையாளர்கள்(பொது மக்கள்,திணைக்களங்கள் ,முதலீட்டாளர்கள்)
09.	பிரதேச மட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழுக் கூட்டம்	கரைச்சி,கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேச செயலக பிரிவுகள்	28,000	27,980	99.92%	காணிக் கோரிக்கையாளர்கள்(பொது மக்கள்,திணைக்களங்கள் ,முதலீட்டாளர்கள்)

➢ தொழில்துறைத் திணைக்களத்தின் செயற்பாடுகள்

- கைத்தறி உற்பத்தியும் பயிற்சியும்.
- தும்பு உற்பத்தியும் பயிற்சியும்.
- பாரம்பரிய சிறு கைத்தொழில் பயிற்சி.
- ஏனைய பாரம்பரியமற்ற தொழிற்பயிற்சிகள் (Aari Embroidery work,Jewelry Making, பால் சார்ந்த பொருட்கள் உற்பத்தி

2021 ம்ஆண்டில் தொழிற்துறைத் திணைக்களத்தினால் செயற்படுத்தப்பட்ட தொழிநுட்ப பரிமாற்ற பயிற்சிநெறிகளின் விபரம் கீழ்வருமாறு:

இல	பயிற்சி நெறி	கிராம அலுவலர் பிரிவு	பிரதேச செயலர் பிரிவு	காலப்பகுதி	பயனாளிகளின் எண்ணிக்கை
1	Aari Embroidery work	கனகபுரம்	கரைச்சி	5 நாட்கள்	15
2	Jewelry Making	கனகபுரம்	கரைச்சி	10 நாட்கள்	20
3	பால் சார்ந்த பொருட்கள் உற்பத்தி	மட்டுவில்நாடு	பூநகரி	10 நாட்கள்	20

குறுங்கால பயிற்சிநெறி





தொழில் முயற்சி சார்ந்த சேவைகள் 2021

இல	விபரம்	பயனாளிகள் எண்ணிக்கை	செலவு விபரம்	காலப்பகுதி
1	தொழில் முயற்சியாளர்களுக்கான உபகரணங்கள் வழங்கல். – மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதி	22	1,036,738.18	01.01.2021 – 31.12.2021
2	எமது கைத்தறி நெசவு நிலையத்தில் கைத்தறி நெசவு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டமை.	2		01.01.2021 – 31.12.2021
3	எமது தும்பு உற்பத்தி நிலையத்தில் வேலை வாய்ப்பு வழங்கப்பட்டமை.	4		01.01.2021 – 31.12.2021

4	புது வருடத்தை முன்னிட்டு தொழில் முயற்சியாளர்களுக்கு சிறப்பு சந்தை ஒழுங்கமைக்கப்பட்டமை. (நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகள்)	145	58,250	08.04.2021 09.04.2021
5	மாகாண கைத்தொழில் கண்காட்சி மூலம் உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவித்தமை.	30		23,24.10.2021

புதுவருட விற்பனை சந்தை - 2021





தொழில் முயற்சியாளர்களுக்கான உபகரணங்கள் வழங்கல். – மாகாண குறித்தொதுக்கப்பட்ட





தொழிற் பயிற்சி நிலையங்கள்,விற்பனை நிலையங்கள்

- கைத்தறி நெசவு நிலையம் - தர்மபுரம், கண்டாவளை.
- தும்பு உற்பத்தி நிலையம் - புலோப்பளை, பச்சிலைப்பள்ளி
- பொதியிடல் நிலையம் - பள்ளிக்குடா, பூநகரி.
- உள்ளூர் உற்பத்திபொருள் விற்பனை நிலையம் - திருநகர், கரைச்சி

➢ கலாசார அலுவல்கள் திணைக்களம்

01. சர்வமத வழிபாடு

புது வருடத்தினை வரவேற்கும் முகமாக ஆசிவேண்டிப் பிரார்தனைகள் வழிபாடுகள் பின்வரும் வணக்கஸ்தலங்களில் இடம்பெற்றது. 100 பேர் வரையில் கலந்து கொண்டனர்.

- நாகதம்பிரான் ஆலயம் , புளியம்பொக்கணை, கண்டாவளை - 06.01.2021
- புனித யாகப்பர் தேவாலயம், கிளாலி, பச்சிலைப்பள்ளி - 07.01.2021
- லும்மினி விகாரை, A9 வீதி ,கிளிநொச்சி - 19.01.2021
- முகைதீன் யும்மா பள்ளிவாசல், நாச்சிக்குடா,பூநகரி - 19.01.2021





02. பொது நூலகங்களுக்கு நூல்கள் வழங்கல்

நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் ஒவ்வொரு நூலகங்கள் வீதம் தெரிவு செய்யப்பட்டு மூன்று நூலகங்களுக்கு ஒரு தொகுதி நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. 20பேர் கலந்து கொண்டனர்.

- பொது நூலகம், இரணைமாதாநகர் - 26.10.2021
- பொது நூலகம், ஸ்கந்தபுரம் - 28.10.2021
- பொது நூலகம், முகமாலை - 02.11.2021





03.கலைஞர் சுவதம் நிகழ்ச்சித்திட்டம்

கலைத்துறைக்கு அரும்பணியாற்றிய பின்வரும் பிரிவுகளிலுள்ள கலைஞர்களது வீடுகளுக்கு சென்று அவர்களது சுகதுக்கங்களை கேட்டறிந்து அவர்களுக்கு உதவிப் பொருட்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன.

- பூநகரி - முழங்காவில், கரியாலைநாகபடுவான் - 26.10.2021
- கரைச்சி – அக்கராயன், மணியங்குளம் - 28.10.2021
- பச்சிலைப்பள்ளி – இத்தாவில், புலோப்பளை - 02.11.2021
- கண்டாவளை – கூகைமாவடி, பரந்தன் - 08.11.2021

➢ தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் செயற்பாடுகள்

தொகைமதிப்பு புள்ளிவிபரத்திணைக்களமானது இலங்கையின் தேசிய புள்ளிவிபர அலுவலகமாக விளங்குவதுடன் அரசாங்கத்துக்கு தேவையான புள்ளிவிபரத்தரவுகள் சேகரித்தல், வெளியிடுதல் என்பவற்றிற்கு பிரதான பொறுப்புடையதாகவும் விளங்குகின்றது.

நாட்டின் பல்வேறு துறைகளின் சமூக பொருளாதார நிலைமைகள் சம்பந்தமான தரவுகளை சேகரித்தல், வழங்குதல் ஆகிய அதன் பொறுப்பிற்கு மேலதிகமாக புள்ளிவிபர சேவைகள் தேவைப்படும் சகல அரச முகவர்களிற்கும் தொழில்சார் அலுவலர்களை பயிற்றுவித்து பணிக்கமர்த்தலும் அதன் பணியாகும். அத்துடன் புள்ளிவிபர விடயங்கள் தொடர்பில் உதவி தேவைப்படும் முகவர்களிற்கு அதன் தொழில்நுட்ப பிரிவுகளினூடாக புள்ளிவிபர ஆலோசனைச்சேவைகளையும் வழங்குகின்றது.

திணைக்களத்தின் செயற்பாடுகள்:

- ❖ புகையிலை பாவனை தொடர்பான மாதிரி அளவீடுகள்
- ❖ சராசரி நெல்விளைச்சலை மதிப்பீடு செய்வதற்காக ஆண்டுக்கு இரு போகங்களில் நடாத்தப்படும் மாதிரி அளவீடுகள்
- ❖ கைத்தொழில் வர்த்தகம் சேவைகள் பற்றிய வருடாந்த அளவீடு
- ❖ நெற் புள்ளிவிபரம்
- ❖ மேட்டுநிலப்பயிர்கள் பெரும்போகம் மற்றும் சிறுபோகம்.
- ❖ சில்லறை விலைகளும் உற்பத்தியாளர் விலைகளும்
- ❖ கால்நடைப் புள்ளிவிபரங்கள்
- ❖ கொல்களங்களில் கொல்லப்படும் விலங்குகளின் எண்ணிக்கை
- ❖ கட்டிட புள்ளிவிபரம்

செயற்திறன் நடவடிக்கைகள்

2ம் அத்தியாயத்தின் கீழ் வரும் எல்லா வேலைத்திட்டங்களும் 2021ம் ஆண்டு முழுமையாகவும் வெற்றிகரமாகவும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கிடைத்த நிதி ஒதுக்கீடுகள்	:	ரூபா. 808655
செலவழித்த நிதி	:	ரூபா. 623587.98
மிகுதி நிதி	:	ரூபா. 185067.02

➢ திட்டமிடற்செயலகத்தின் செயற்பாடுகள்

கிளிநொச்சி மாவட்டத்தில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட வேலைத்திட்டத்தினை அமுல் படுத்துவதற்காக நிதி அமைச்சினால் 2021 ம் ஆண்டில் ரூபா 15.0365 மில்லியன் ஒதுக்கீடு விடுவிக்கப்பட்டது. இவ் அபிவிருத்தி வேலைத்திட்டமானது கரைச்சி, கண்டாவளை, பூநகரி மற்றும் பச்சிலைப்பள்ளி ஆகிய நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் முன்னெடுக்கப்பட்டன. வேலைத்திட்டங்கள் நீர் வழங்கல், கிராமிய மின்னிணைப்பு வசதியை ஏற்படுத்தல்,வீதி புனரமைப்பு கல்வி அபிவிருத்தி, பொது விளையாட்டு மைதான புனரமைப்பு, சிறிய நீர்ப்பாசனம் பதிவுசெய்யப்பட்ட சங்கங்களிற்கு வசதிகளை ஏற்படுத்தல் ,மத மற்றும் கலாசாரநிலையங்களிற்கு வசதிகளை ஏற்படுத்தல்,மற்றும் ஏனையவை போன்ற துறைகளின் கீழ் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

துறை ரீதியாக மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு பற்றிய விபரம். துறை ரீதியாக மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு பற்றிய விபரம்.

தொ. இல	துறை	வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை	ஒதுக்கப்பட்ட மொத்த நிதி (ரூபா, மில்லியன்)
1	நீர்வழங்கல்	2	0.300
2	கிராமிய மின்னிணைப்பு	15	1.535
3	வீதி அபிவிருத்தி	1	0.120
4	கல்வி அபிவிருத்தி	25	4.943
5	பொது மைதான அபிவிருத்தி	11	1.210
6	சிறிய நீர்ப்பாசனம்	2	0.425
7	பதிவு செய்யப்பட்ட சங்கங்களிற்கு வசதிகளை ஏற்படுத்தல்	56	3.965
8	மத மற்றும் கலாசார நிலையங்களிற்கு வசதிகளை ஏற்படுத்தல்	17	2.3285
9	ஏனையவை	1	0.210
	மொத்தம்	**130**	**15.0365**

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு பற்றிய விபரம்

தொ.இல	பிரதேச செயலர் பிரிவு	வேலைத் திட்டங்களின் எண்ணிக்கை	தொகை (ரூபா)
1	கரைச்சி	77	10.023
2	கண்டாவளை	18	1.862
3	பூநகரி	23	2.273
4	பச்சிலைப்பள்ளி	12	0.8785
	மொத்தம்	**130**	**10.0365**

சௌபாக்கியா உற்பத்திக் கிராம வேலைத்திட்டம்

சமுர்த்தி,வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் கீழ் நாட்டைக் கட்டியெழுப்பும் ‘‘சுபீட்சத்தின் நோக்கு’’ செயற்பாடுகளை உணர்த்தும் பொருட்டு மனைப் பொருளாதாரத்தினூடாக உற்பத்தியினை ஊக்குவித்தல் கிராமப்புற மக்களின் வருமானத்தை உயர்த்துதல் கிராமியப் பொருளாதாரத்தை மேம்படுத்தல் மற்றும் தேசிய உற்பத்திக்கு உயரிய பங்களிப்பினை பெற்றுக் கொடுத்தல் என்பவற்றை நோக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட சௌபாக்கியா உற்பத்திக் கிராம வேலைத்திட்டமானது கிளிநொச்சி மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் ஒரு கிராம அலுவலர் பிரிவு வீதம் 4 கிராம அலுவலர் பிரிவுகளில் ஆரம்பிக்கப்பட்டது. நான்கு உற்பத்திக் கிராமங்களில் ஒரு உற்பத்திக் கிராமத்திற்கு உயர்ந்த பட்ச நிதி ஒதுக்கீடு 10 மில்லியன் ரூபா வீதம் 39.356 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் இவ் உற்பத்திக் கிராமங்களில் மக்களின் வாழ்வாதார அபிவிருத்திக்கு நேரடியாக பங்களிக்கின்ற பொது உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிற்கு தலா 3 மில்லியன் வீதம் 12 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டு வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. 680 பயனாளிகளிற்கும் தலா 2500.00 ரூபா வீதம் 1,700,000.00 ரூபா உற்பத்தியாளர் தகவல்கள் அடங்கிய பெயர்ப்பலகை நிறுவுவதற்காக நிதி ஒதுக்கப்பட்டு வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

பிரதேச செயலக ரீதியாக ஒதுக்கப்பட்ட நிதி விபரம்





2021 ம் ஆண்டில் கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப்பொருட்கள் தொழில்மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்ட மலசலகூடங்கள் அமைத்தல் வேலைத்திட்டம்

வீட்டுத்திட்டம்

இல	பிரதேசசெயலகம்	வீடுகளின் எண்ணிக்கை ரூபா	
		600000	1000000
1	கரைச்சி	167	61
2	கண்டாவளை	80	21
3	பூநகரி	33	11
4	பச்சிலைப்பள்ளி	50	37
மொத்தம்		330	130

கிராமிய வீடமைப்பு மற்றும் நிாமாணத்துறை மற்றும் கட்டடப் பொருட்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சினால் கிளிநொச்சி மாவட்டத்திற்கு முரண்பாட்டினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணமக்களிற்கு சீமெந்து கல்லினாலான நிரந்தர வீடு நிர்மாணத் திட்டத்தின் கீழ் தலாரூபா 600000 பெறுமதியான 330 வீடுகளும் மற்றும் தலா ரூபா 1000000 பெறுமதியான 130 வீடுகளும் 328 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டது. கீழ் வரும் ஒழுங்கில் வீடுகள் பிரதேச செயலர் ரீதியாக ஒதுக்கப்பட்டது.**"ஆறுகளை பாதுகாப்போம்"** தேசிய நிகழ்ச்சித்திட்டம்

அக்கராயன் ஆறு மற்றும் அதன் சூழற்றொகுதியை பாதுகாக்கும் வேலைத்திட்டம்

சுற்றாடல் அமைச்சின் 4.1 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தினால் இவ் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. சுற்றுச்சூழலையும் உயிர் வளங்களையும் பாதுகாத்து மக்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்குவதை முக்கிய நோக்கமாக கொண்டு மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது ஏனைய தொடர்புடைய நிறுவனங்களுடன் இணைந்து இந்தத் திட்டத்தை 2021 ஆம்

ஆண்டு ஆரம்பித்திருந்தது. இத்திட்டத்தின் கீழ் அக்கராயன் ஆற்றுப்படுக்கையில் கீழ்க்குறிப்பிடப்படும் வேலைகள் நிறைவுறுத்தப்பட்டுள்ளன.

1. மண் அரிப்பினை தடுத்தல் நீர் தேங்குவதை தடுத்தல்
2. கழிவகற்றல்
3. மரநடுகை மேற்கொள்ளல்
4. சட்டவிரோத மணல் அகழ்வை தடுத்தல்
5. ஆற்றின் சுற்றுப்புறசூழலை ஆய்வுசெய்து பாதுகாத்தல்
6. ஆற்றின் நீர்வரத்து நீர்ப்பிடிப்பு என்பவற்றை ஆய்வுசெய்து முகாமை செய்தல்
7. நீர் நுளைவாயில் கட்டுமானங்களினை உருவாக்குதல்





➢ மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகு திறன்

அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகானது மாவட்டத்தின் அனர்த்த அபாய முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கு வசதியாக மாவட்ட செயலகத்துடன் இணைக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றது. இதன் முக்கிய நடவடிக்கைகளாக

1. அனர்த்தங்களின் எதிர்கால பாதிப்பைக் குறைப்பதற்காக சமூகங்கள் மற்றும் பங்குதாரர்களைத் தயார்படுத்தி மாவட்டத்தின் இயல்பான சூழ்நிலையில் தணிப்பு, தடுப்பு மற்றும் தயார்நிலை போன்ற அனர்த்த அபாயக் குறைப்பு நடவடிக்கைகளைச் செயல்படுத்த உதவுதல்.
2. மாவட்டத்தின் நிலையான அபிவிருத்தியை உறுதிசெய்வதற்காக அபிவிருத்தித் துறையில் அனர்த்த அபாய குறைப்பு செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஊக்குவித்தல்.
3. அவசர நிலைகளுக்கு பதிலளிக்க உடனடி மற்றும் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதுடன் மாவட்ட மட்டத்தில் பதில் மற்றும் மீட்பு செயற்பாடுகளை விரைவுபடுத்த அனைத்து தரப்பினரையும் ஒருங்கிணைத்தல்.

அனர்த்தங்களின் தாக்கங்களைக் குறைப்பதற்காக அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகு 2021இல் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

1.பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள்

நிகழ்ச்சித்திட்டம்	நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	ஒதுக்கீடு ரூபா	செலவு ரூபா	மிகுதி ரூபா
பயிற்சிமற்றும்விழிப்புணர்வு	11	150,250	144,555	5,695

		
தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான அனர்த்த அபாய குறைப்பு தொடர்பான பயிற்சி	மீனவர் சமூகத்திற்கான விழிப்புணர்வு	தேசிய பாதுகாப்பு தினம் 2021

2.தயார் நிலை மற்றும் திட்டமிடல் செயல்பாடுகள்

விபரம்	ஒதுக்கீடு ரூபா	செலவு ரூபா
கனகாம்பிகைக்குளத்தின் வாய்க்கால் கட்டமைப்புகளை மேம்படுத்தல்	2,000,000	1,997,752.12

		
மாவட்டசெயலகத்தில்பருவ காலமழைக்கூட்டம்	சுனாமி முன்னாயத்த திட்டம்	கிராமமட்டஅனர்த்த முகாமைத்துவதிட்டம் தயாரித்தல்

3.அனர்த்ததணிப்புமற்றும்ஆராய்ச்சியும்அபிவிருத்தியும்

நிகழ்ச்சித்திட்டம்	நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	ஒதுக்கீடு ரூபா	செலவு ரூபா	மிகுதி ரூபா
தயார்நிலைமற்றும்திட்டமிடல் செயற்பாடுகள்	15	195,100	183,940	11,160



செயற்திட்டம்ஆரம்பிப்பதற்கு முன்



செயற்திட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த பொழுது



செயற்திட்டம்முடிவடைந்த பின்

4.செயற்பாடு அவசர பதில் நடவடிக்கை

* கொவிட் 19 பதிலிறுத்தல்நடவடிக்கைகள்
* வடகீழ்பருவகாற்றுமழை பதிலிறுத்தல்நடவடிக்கைகள்







➢ சமூக சேவைகள் திணைக்களம்

ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சின் பாதுகாப்புப் பிரிவின் கீழ்சமூக சேவைகள் திணைக்களம், அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம், முதியோருக்கான தேசிய செயலகத்தின் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றது.

1.அங்கவீனமுற்ற நபர்களுக்கான 5000 ரூபா கொடுப்பனவு. மாற்றுவலுவுடையோரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக 5000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

இல	பிரதேச செயலர் பிரிவு	கொடுப்பனவு பெறுபவர்கள்	காத்திருப்பு பட்டியலில் உள்ளோர்
01	கரைச்சி	545	922
02	கண்டாவளை	299	326
03	பூநகரி	304	301
04	பச்சிலைப்பள்ளி	135	195
	மொத்தம்	**1283**	**1744**

2. 70 வயதிற்கு மேற்பட்ட முதியவர்களுக்கு ரூ.2000 கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

இல	பிரதேச செயலர் பிரிவு	கொடுப்பனவு பெறுபவர்கள்	2000 ரூபா கொடுப்பனவு பெறத் தகுதியானோர்
01	கரைச்சி	2104	800
02	கண்டாவளை	728	330
03	பூநகரி	612	206
04	பச்சிலைப்பள்ளி	378	170
	மொத்தம்	**3822**	**1506**

3.சிறுநீரக நோயாளிகளுக்கு ரூ.5000 கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

இல	பிரதேச செயலர் பிரிவு	கொடுப்பனவு பெறுபவர்கள்	5000 ரூபா கொடுப்பனவு பெறத் தகுதியானோர்
01	கரைச்சி	187	70
02	கண்டாவளை	56	8
03	பூநகரி	37	05
04	பச்சிலைப்பள்ளி	12	13
	மொத்தம்	**292**	**96**

4.மாவட்டத்துக்கான ஒதுக்கீடு

இல	விபரம்	ஒதுக்கீடு (ரூ)	செலவு (ரூ)
01	முதியோர் கொடுப்பனவு (70 வயதிற்கு மேற்பட்டோர்)	91,730,000	90,080,700
02	சிரேஸ்ட பிரஜைகளுக்கான கொடுப்பனவு (100 வயதிற்கு மேற்பட்டோர்)	160,000	120,000
03	அங்கவீனமுற்ற நபர்களுக்கான கொடுப்பனவு	84,030,000	83,965,000
04	சிறுநீரக நோயாளிகளுக்கான கொடுப்பனவு	17,760,000	17,760,000
05	CBR ஒதுக்கீடு	45,000	44,675

5.மாற்று வலுவுடையோரை ஊக்குவிப்பதற்காக அங்கவீனமுற்ற தேசிய செயலகத்தால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்கள்.

இல	திணைக்களம்	நிகழ்ச்சித்திட்டம்	கிடைக்கப்பெற்ற ஒதுக்கீடு (ரூ)
01	அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்	வேலை வாய்ப்பில் ஈடுபடும் அங்கவீனமுற்ற நபர்களுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு	2,283,000
02	தனிப்பெற்றோரைக் கொண்டவர்களுக்கான கல்வி உதவி		400,000

6.முதியோருக்கான தேசிய செயலகத்தினால் முதியோருக்கு முன்னெடுக்கப்பட்ட வேலைத் திட்டங்கள்.

இல	திணைக்களம்	நிகழ்ச்சித்திட்டம்	கிடைக்கப்பெற்ற ஒதுக்கீடு (ரூ)
01	முதியோருக்கான தேசிய செயலகம்	முதியோர் சுயதொழில்	100,000
		ஆரோக்கியா	75,000
		குறைந்தபட்ச உதவிகள்	300,000
		முதியோர் சங்கங்களை வலுவூட்டல்	200,000

7. அங்கவீனமுற்ற நபர்களுக்காக வாழ்க்கை தொழிற்பயிற்சி நிலையம் அமைப்பதற்காக 2019 ம் ஆண்டு 80 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுவரை 45 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

➢ மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் செயற்பாடுகள்

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தினால் பொது மக்களுக்கான சாரதி அனுமதிப் பத்திரங்கள் வழங்குதல் அவர்களது வாகனங்களுக்குத் தேவையான இலக்கத்தகடுகளை பெற்று விநியோகித்தல், வாகனங்களை தேவைக்கேற்ப பரீட்சித்து பரீட்சிப்புச் சான்றிதழ்கள் வழங்கல் முதலான சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு கடந்த 2021ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட சேவைகளாவன:

1.புதிதாக சாரதி அனுமதிப்பத்திரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட 3370 விண்ணப்பங்களும், ஏற்கனவே சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்டவர்களால் இலகுரக வாகனங்களுக்குரிய நீடிப்புக்காக சமர்ப்பிக்கப்பட்ட 380 விண்ணப்பங்களும், கனரக வாகனங்களுக்குரிய நீடிப்புக்காக சமர்ப்பிக்கப்பட்ட 438 விண்ணப்பங்களும், சாரதி அனுமதிப்பத்திரம் புதுப்பித்தலுக்கான 2169 விண்ணப்பங்களுமாக மொத்தம் 6357 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

2.இவ்வாறு விண்ணப்பித்த புதிய விண்ணப்பதாரர்கள் 3370 பேருக்கும், கனரக வாகனங்களுக்கான சாரதி அனுமதிப்பத்திர நீடிப்பிற்காக விண்ணப்பித்த 438 பேருக்கும், மீள் பரீட்சைக்காக விண்ணப்பித்த 1639 பேருக்கும் எழுத்துப் பரீட்சைகள் நடாத்தப்பட்டு அதில் சித்தியடைந்த 3193 பேருக்கு பழகுனர் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

3.எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்து பழகுனர் அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொண்ட 3193 பேருக்கும், இலகுரக வாகன சாரதி அனுமதிப் பத்திர நீடிப்புக்காக விண்ணப்பித்த 380 பேருக்குமாக மொத்தம் 3573 பேருக்கு செயன்முறைப் பரீட்சைகள் நடாத்தப்பட்டு தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

4.அத்துடன் தலைமை அலுவலகத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற 282 வாகனங்களுக்கான இலக்கத்தகடுகள் உரிமையாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

5. வாகனங்களின் உடலமைப்பு மாற்றம் செய்வதற்காக விண்ணப்பித்த 25 பேரின் வாகனங்கள் பரீட்சிக்கப்பட்டு வாகன நிறைச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் பல்வேறு தேவைகளுக்காக வாகனங்கள் பரிசோதிக்கப்பட்டு 222 பரீட்சிப்பு அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன.

6.தலைமை அலுவலகத்தினால் செயன்முறைப்படுத்தப்பட்டுள்ள IVR முறைமையூடாக பெருமளவான சேவைகள் நீண்ட காத்திருப்புக்களின்றி பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

இவ்வலுவலகத்தால் நிறைவேற்றப்பட்ட மேற்படி சேவைகளினூடாக ரூபா.17,192,155 சேவைக்கட்டணமாக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

➢ மாவட்டபதிவாளர் அலுவலகசெயற்பாடுகள்

ஆவணம் பதிவு செய்தல்

1.பதிவு செய்யப்பட்ட உறுதிகள்	105
a.துரித சேவை	
b.சாதாரண சேவை	1905
2. பதிவு செய்யப்பட்ட அரச அளிப்புகள்	1400
3. பெறப்பட்ட இணைப்பிரதிகள்	1004
4. வழங்கப்பட்ட உறுதிப்பிரதிகள	
a.துரித சேவை	116
b.சாதாரண சேவை	140
5. வழங்கப்பட்ட சுருக்கப்பிரதிகள்	
a.துரித சேவை	1333
b.சாதாரண சேவை	784
6. வழங்கப்பட்ட அனுமான வயது சான்றிதழ்கள்	
7. பெறப்பட்ட தேடுதல் விண்ணப்பங்கள்	05
8. அனுமதிக்கப்பட்ட காலம் கடந்த பிறப்புக்கள்	-
9. மொழிபெயர்ப்பு விண்ணப்பங்களின் எண்ணிக்கை	-
10. பெறப்பட்ட பிறப்பு,இறப்பு,விவாக விண்ணப்பங்கள்	2527

கட்டணங்கள் (காணிப்பதிவகம்) ரூபா

1. உறுதி பதிவு செய்தல்	
a. துரித சேவை	97900
b. சாதாரண சேவை	219840
2.உறுதிப்பிரதி,சுருக்கப்பிரதி	
a.துரித சேவை	382600
b.சாதாரண சேவை	163820
3. தேடுதல்	2800
4. இணைப்பிரதியில் ஒட்டப்பட்ட முத்திரைப்பெறுமதி-------	26832663
5. மொழிபெயர்ப்பு கட்டணம்	-
6. பெறப்பட்ட பிறப்பு, இறப்பு, விவாக, விண்ணப்பங்கள்	420060

பிரதேச செயலக செயற்பாட்டு விபரங்கள்

1.பெறப்பட்ட பிறப்பு, இறப்பு, விவாக விண்ணப்பங்கள்	28583
2.வழங்கப்பட்ட பிரதிகள்	42377
பதியப்பட்ட	
பிறப்பு	2909
இறப்பு	647
விவாகம்	1017

3.அனுமதிக்கப்பட்ட திருத்தங்கள் (27,27(a),52(1)	2897
4.அனுமதிக்கப்பட்ட காலம் கடந்த பிறப்பு (24)	661
5.அனுமதிக்கப்பட்ட காலம் கடந்த இறப்பு (36)	21

கட்டண விபரம் (பிரதேச செயலகம்)

1.(கரைச்சி, கண்டாவளை,பச்சிலைப்பள்ளி,பூநகரி) பெறப்பட்ட (பிறப்பு, இறப்பு, விவாகம்) விண்ணப்பங்களுக்கான கட்டணம் A+B	4817060
2.பெறப்பட்ட காலம் கடந்த பிறப்பு, இறப்பு, திருத்தங்கள் தொடர்பான கட்டணங்கள்	52300
3.திருமண பதிவு கட்டணம்	26240

➢ விளையாட்டுப் பிரிவு

2021 ஆம் ஆண்டில் பிரதேச மட்ட மாவட்ட மட்டங்களில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளின் அடைவுகள் வருமாறு.

விளையாட்டு வகை	பங்கு பற்றுநர்கள்	
	ஆண்கள்	பெண்கள்
துடுப்பாட்டம்	1st	2nd
எல்லே	3rd	2nd
கபடி	2nd	2nd
கடற்கரை கபடி	3rd	1st
கடற்கரை வலைப்பந்து	3rd	2nd
வுலைப்பந்து	3rd	2nd
கராத்தே	3rd	2nd
யூடோ	2nd	2nd
Taek wondo	2nd	2nd
T.T		2nd

➢ சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் செயற்பாடுகள்

கிளிநொச்சி மாவட்டத்தில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நான்கு பிரதேச செயலக பிரிவுகளில் பின்வரும் வேலைத்திட்டங்கள் 2021ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன. நலனுதவிக் கொடுப்பனவு நான்கு பிரதேச செயலக பிரிவுகளுக்கும் பின்வருமாறு வழங்கப்பட்டிருந்தது.

பிரதேச செயலகம்	நலனுதவி பெறும் சமுர்த்தி குடும்பங்கள்	நலனுதவி பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை அடிப்படையில் நலனுதவி கொடுப்பனவு ரூபா			
		முத்திரை ரூ. 420/=	முத்திரை ரூ. 1500/=	முத்திரை ரூ. 2500/=	முத்திரை ரூ. 3500/=
கரைச்சி	3830	0	1227	648	1955
	3262	0	1093	594	1575
	5590	0	1737	1019	2834
கண்டாவளை	5073	0	1695	963	2415
பூநகரி	1588	0	484	291	813
	2323	0	719	347	1257
பச்சிலைப்பள்ளி	2085	22	654	392	1017
மொத்தம்	**23751**	**22**	**7609**	**4254**	**11866**

1.சமுர்த்தி சமூக பாதுகாப்பு கொடுப்பனவுகளாக (பிறப்பு, இறப்பு,வைத்தியசாலை கொடுப்பனவு, சிப்தொர புலமைப் பரிசில்) நான்கு பிரதேச செயலக பிரிவுகளுக்கும் 19314 பயனாளிகளுக்கு 6.6 முில்லியன் ரூபா வழங்கப்பட்டிருந்து.

2.சமுர்த்தி விசேட வாழ்வாதார வேலைத்திட்டத்தின் கீழ் 77 பயனாளிகளுக்கு 3.8 மில்லியன் ரூபா பெறுமதியில் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டது.

3.சமுர்த்தி வலுவூட்டல் வேலைத்திட்டத்தின் கீழ் 1438 பயனாளிகளுக்கு 71.9 மில்லியன் ரூபா பெறுமதியில் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டது.

4.கண்டாவளை பிரதேச செயலக பிரிவின் கீழ் உள்ள தட்டுவன் கொட்டி கிராம சேவக பிரிவில் ரூபா 3 மில்லியன் பெறுமதியில் சமுர்த்தி ஆரோக்கிய உணவகம் அமைக்கப்பட்டுள்ளது.

5.சமுர்த்தி வீட்டுத்தோட்ட அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கிழ் 39478 பழமரக்கன்றுகள்,10195 பைக்கற் விதை தானியங்கள் மற்றும் 2850 கோழிக்குஞ்சுகள் என்பன வழங்கப்பட்டது.

6.சமுர்த்தி விசேட வீடமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் 20 வீடுகள் ரூபா 4 மில்லியன் பெறுமதியில் நான்கு பிரதேச செயலக பிரிவுகளிலும் நிர்மானிக்கப்பட்டுள்ளது.

7.சமுர்த்தி சௌபாக்கியா வீடமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் 4 வீடுகள் ரூபா 2.4 மில்லியன் பெறுமதியில் நான்கு பிரதேச செயலக பிரிவுகளிலும் நிர்மானிக்கப்பட்டுள்ளது.

8.சமுர்த்தி சமூக அபிவிருத்தி நிதியைப் பயன்படுத்தி நான்கு பிரதேச செயலக பிரிவுகளிலும் 0.39 மில்லியன் ரூபா நிதியில் 15 மலசல கூடங்கள் வழங்கப்பட்டன.

9.திரியபியச வீட்டுத்திட்டத்தில் கரைச்சி பிரதேச செயலக பிரிவிற்கு 0.4 மில்லியன் ரூபா பெறுமதியில் 02 வீடுகள் வழங்கப்பட்டது.

10.சமுர்த்தி வீட்டு லொத்தர் நிதியத்தின் கீழ் 04 பிரதேச செயலகப்பிரிவிற்கும் 9.6 மில்லியன் ரூபா சமுர்த்தி பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

➢ வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் 2021ம் ஆண்டு பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

- தொழில் முடிவுறுத்தப்பட்டு அல்லது கொவிட் - 19 தொற்று காரணமாக நாட்டிற்கு திரும்பியவர்களை மீழ் இணைத்தல் நிகழ்ச்சித் திட்டம்

  நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை – 04
- மனித வியாபாரம் அல்லது மனித கடத்தல் தொடர்பாகவும் பாதுகாப்பான புலம் பெயர்தல் தொடர்பானதும் நிகழ்ச்சித் திட்டம்

  நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை – 06
- பயிற்றப்பட்ட தொழிலாளர் படை ஒன்றினை உருவாக்கும் நிகழ்ச்சித் திட்டம்

  நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை – 08

➢ கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம்

மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களினால் ரூபா 23,560,715 பெறுமதியான 74 கொடுப்பனவுகளுக்கு காசுப்பற்றுச்சீட்டு, பெறுவனவு உறுதிப்படுத்தல் கடிதம், பற்றுச்சீட்டு மதிப்பீடு, பயனாளிகள் பட்டியல், பயனாளிகள் விபரம், பொருள் பெறுவனவு பட்டியல், கொள்வனவு கட்டளை, விநியோகஸ்தர் விபரம், வேலை நிறைவேற்றல் அறிக்கை, விரலடையாளப்பதிவு தினவரவு பதிவேடு, மோட்டார் வாகன பரீட்சகர் அறிக்கை என்பன இணைக்கப்படாமையினால் கொடுப்பனவுகளை கணக்காய்வில் சான்றுறுதிப்படுத்த முடியாதுள்ளது.

1.6.3 **பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை**

மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களினால் பின்வரும் சில பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளது வரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

பதிவேடுகளின் வகை	உரிய பிரமாணம்	அவதானிப்புக்கள்
1. இழப்புக்கள் பதிவேடு	நிதி ஒழுங்கு விதி 110	(i) மாவட்டச் செயலகம் - மீளாய்வாண்டு வரை நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. (ii) பிரதேச செயலகம் பு'நகரி – நாளது வரை பேணப்பட்டிருக்கவில்லை.
2. பிணைகள் பதிவேடு	நிதி ஒழுங்கு விதி 891(1)	மீளாய்வாண்டில் - நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை
3. பொருட்பதிவேடு	நிதி ஒழுங்கு விதி 754	மீளாய்வாண்டில் - நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை

2. நிதி மீளாய்வு

2.1 செலவின முகாமைத்துவம்

(அ) மீளாய்வாண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் இரண்டு செலவின விடயங்களிற்கு ஆண்டுப்பாதீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 750,000 பணம் குறிப்பிட்ட நோக்கத்திற்கு செலவு செய்யப்படாது 100% சேமிப்பாக காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

(ஆ) ஒரு செலவின விடயத்திற்கு ஆண்டு மதிப்பீட்டில் எவ்விதமான ஒதுக்கீடுகளும் செய்யப்படாது குறைநிரப்பு ஒதுக்கீடு மூலம் ரூபா 62,430,000 பெறப்பட்டு குறித்த செலவின விடயம் புதிதாக உருவாக்கப்பட்டு (Creation of object code) ரூபா 61,349,450 செலவு செய்யப்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

(இ) அரச கணக்குகள் வழிகாட்டி இல 2021/03 இன் பந்தி 3.4 இன் பிரகாரம் மூலதன செலவின் சேமிப்பு 14% தொடக்கம் 61% ஆன சேமிப்புக்கள் காணப்படுவதுடன் மீண்டுவரும் செலவின் சேமிப்பு 9% தொடக்கம் 49% வரை காணப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளதுடன் சேமிப்புக்களிற்கான காரணங்களை கணக்காய்வில் ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

(ஈ) 05 மூலதன செலவின விடயங்களின் மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 8,000,000 ஆகவும் மொத்த செலவினமானது ரூபா 4,587,213 ஆகவும் காணப்பட்டதன் விளைவாக மூலதன செலவின விடயங்களின் சேமிப்பு 42% ஆக ரூபா 3,412,787 காணப்படுகின்றன.

2.2 பொறுப்புக்கள் கடப்பாடுகளுக்கு உட்படல்

268-1-2-0-1501 செலவின விடயத்திற்கு 2021 ஆம் ஆண்டில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களாக ரூபா 715,000 காணப்படுகின்ற போதும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய கூற்றில் (Note-iii) குறித்த விடயம் வெளிப்படுத்தப்பட்டிருக்காமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

2.3 மிகை செலவினம்

புநகரி பிரதேச செயலக தபால் செலவு ரூபா 31,003 பிரதேச செயலக தபால் செலவுக்குரிய தலைப்பு மற்றும் விடய வகுப்பின் கீழ் கொடுப்பனவு செய்யப்படாது ஒதுக்கீடற்ற காரணத்தினால் தவறான வெவ்வேறு தலைப்பு மற்றும் விடய வகுப்பின் கீழ் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

2.4 எல்லைகளை மீறுதல்

மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர் முற்பண கணக்கிணக்க கூற்றின் பிரகாரம் திணைக்கள புத்தகத்திற்கும் திறைசேரி புத்தகத்திற்குமிடையில் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளது. விபரம் வருமாறு

	திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் 31.12.2021 இல் மீதி	திறைசேறி புத்தகங்களின் பிரகாரம் 31.12.2021 இல் மீதி	வேறுபாடு
	(ரூபா)	(ரூபா)	(ரூபா)
Debit during the year - 11	16,958,590	17,208,590	250,000
Debit during the year - 12	2,472,600	2,576,100	103,500
Credit during the year – 11	10,832,392	11,082,392	250,000
Credit during the year - 12	5,475,870	5,478,370	2,500

2.5 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளின் பயன்பாடு

பல்வேறு பணிகளுக்கு 48 எண்ணிக்கையான ஏனைய அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களால் ரூபா 1,181,744,924 கூட்டுத்தொகையான நிதியேற்பாடுகள் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதியேற்பாட்டில் ரூபா 1,140,398,767 செலவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 41,346,157 பெறுமதியான 3.5 வீதமான தொகை மீளாய்வாண்டில் பயன்படுத்தப்படாமல் இருந்துள்ளது.

2.6 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக இலகுவான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையினை செயற்றிறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை செய்ய வேண்டிய போதிலும், அம்மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதாக கூற்றொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படடிருக்கவில்லை.

(ஆ) கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையானதன்பிரகாரம் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியில் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் வழங்கல் இடம்பெறுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும், அறிக்கையின் பிரகாரம் 7 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

2.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு	பெறுமதி (ரூபா)	இணங்காமை
(அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுடன் இணங்காமை.		
தாபன விதிக் கோவையின் அத்தியாயம் XII பிரிவு 1.3, 2.1		திணைக்களத்தில் கடமையாற்றும் 04 உத்தியோகத்தர்கள் கடமைக்கு சமூகமளிக்காத போதும் உரிய முறையில் விடுமுறை அனுமதிப் படிவங்களை வழங்கி பொறுப்பான அலுவலரிடம் அனுமதி பெற்றுக்கொள்ளாமல் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.
(ஆ) அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை		
(i) 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 இலக்க (iv), மற்றும் (v)	132,177	பு'நகரி பிரதேச செயலகத்தினால் விடுமுறை நாள் கொடுப்பனவுகள் விரலடையாள பதிவின்றி வழங்கப்பட்டிருந்தன.
(ii) அரச வாகனங்களை பேணுதல் தொடர்பான 29.12.2016 ஆம் திகதிய 30/2016 இன் பந்தி 3.1	-	மாவட்ட செயலகத்தின் 02 வாகனங்களிற்கு 2-7 வருடங்களுக்கு மேலாக எரிபொருள் நுகர்வு பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை.
(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதிகள்		
நிதி ஒழுங்கு விதிகள் 141(3)	2,034,347	கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு கையளிக்கப்பட்ட பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட்டு இருக்காமல் மேற்படி வேலைகளிற்கு 06 எண்ணிக்கையிலான காசோலைகள் வரையப்பட்டமை அவதானிக்கப்பட்டிருப்பதுடன் 1 ஆம் மற்றும் 2 ஆம் தரப்பினரின் கையொப்பங்கள் காசோலையில் காணப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஏனைய சுற்றறிக்கைகள்

(i) அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகை இலக்கம் 1589/30 இன் அத்தியாயம் XV இன் பிரிவு 170,171,172	திணைக்களத்தில் கடமையாற்றும் 04 உத்தியோகத்தர்கள் 14 - 45 நாட்கள் கடமைக்கு சமூகமளிக்காத போதும் உரிய முறையில் விடுமுறை அனுமதிப் படிவங்களை வழங்கி பொறுப்பான அலுவலரிடம் அனுமதி பெற்றுக்கொள்ளாமல் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளதுடன் பதவி வறிதாக்கல் கடிதம் வழங்கப்படாதுள்ளது.
திறைசேரி செயற்பாடுகள் வழிகாட்டி இலக்கம் 06/2020	பதவி நிலை உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு கணக்கினை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என குறிப்பிட்டும் நியமிக்கப்பட்ட பதவி நிலை உத்தியோகத்தர்களினால் பிரதேச செயலகங்களின் காசுப் புத்தகத்தினை மூடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
(iii) காணி அபிவிருத்தி கட்டளை சட்டத்தின் 464 ஆம் அத்தியாயம் 19(2) ஆம் பிரிவு	- வழங்கப்பட்ட 702 காணி அனுமதிப் பத்திரங்கள் 2022 மார்ச் 07 ஆந் திகதி வரைஉரிய நபர்களுக்கு வழங்கப்படாமல் கரைச்சி பிரதேச செயலகத்தில் தேக்கி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

2.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

1. மாவட்டச்செயலகத்தினால் 04 எண்ணிக்கையான ரூபா 247,178 பெறுமதியான கொடுப்பனவு நிதி ஒழுங்கு விதி 137 இற்கமைய அங்கீகரிக்கும் உத்தியோகத்தரனால் அங்கீகரிக்கப்படாது கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2. 2021 செப்ரெம்பர் 25 ஆம் திகதிய கொள்வனவு கட்டளை இலக்கம் 86 இன் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 22,300 பெறுமதியான பொருட்கள் கணக்காய்வு தினம் வரை (24.01.2022) பிரதேச செயலகத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காதுடன் பெற்றுக்கொள்ளப்படாத பொருட்களிற்காக 30 டிசெம்பர் 2021 ஆம் திகதி P 2112253 இலக்கமுடைய உறுதிச்சீட்டு தயாரித்து 324640 இலக்கமுடைய காசோலை வரையப்பட்டுள்ளமையானது நிதி ஒழுங்கு விதி 137 மற்றும் 138 இற்கு முரணான விடயமாக அவதானிக்கப்பட்டுள்ளதுடன் பெற்றுக்கொள்ளப்படாத பொருட்களிற்கு பொருள் பெற்று கொண்டதாக 5731 இலக்கமுடைய பொருள் பெறுதல் கட்டளை

(GRN) எழுதப்பட்டுள்ளமை முரணான விடயமாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

2.9 முற்பணம் வழங்கலும் தீர்ப்பனவும்

2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையால் திருத்தப்பட்ட நிதி ஒழுங்கு விதி 371(5) இற்கமைய குறித்த பணிகள் பூர்ணப்படுத்தப்பட்ட 10 நாட்களில் பெற்றுக் கொண்ட உப கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 20 சந்தர்ப்பங்களுக்குரியதாக வழங்கப்பட்டிருந்த ரூபா 226,250 கூட்டுத்தொகையான உப கட்டுநிதி 18 நாட்கள் தொடக்கம் 85 நாட்கள் வரையான காலதாமதத்தின் பின்னர் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது.

2.10 முற்பணக் கொடுப்பனவு

(அ) கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர் முற்பணக்கணக்கு இணக்கக்கூற்றின் பிரகாரம் பதவியிலிருந்து விலகிய மற்றும் இடை நிறுத்திய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை ரூபா 1,147,050 ஆனது கடந்த 11 வருடங்களுக்கு மேலாக அறவிட்டுக்கொள்வதற்கு இற்றை வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரச உத்தியோகத்தர் முற்பண கணக்கிணக்க கூற்றிற்கும் உறுப்பினர் கடன் பதிவேட்டு மீதிக்கும் இடையிலான வேறுபாடு

அரச உத்தியோகத்தர் முற்பண கணக்கிணக்க கூற்றில் நிலுவையாக உள்ள கடன் மீதிக்கும் உறுப்பினர் கடன் பதிவேட்டு (CC10) மீதிக்கும் இடையில் ரூபா 1,066,140 வேறுபாடு அவதானிக்கப்பட்டுள்ளது.

2.11 வைப்புக்கள்

(அ) நிதி ஒழுங்கு விதிகள் 571 இன் பிரகாரம் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட கூட்டு மொத்தம் ரூபா 1,006,716 கூட்டுத்தொகையான 08 வைப்புக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஏனைய அமைச்சு மற்றும் திணைக்களங்களில் பல்வேறு பணிகளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 1,733,451 பெறுமதியான பணம் குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாது ஒரு வருடத்திற்கு மேலாக பொது வைப்புக்கணக்கில் மீதியாக பேணப்பட்டு வருகின்றமையினை கணக்காய்வில் அவதானிக்க கூடியதாக உள்ளது.

2.12 வங்கிக் கணக்குகளை செயற்படுத்தல்

(அ) கையளிக்கப்படாத காசோலைகள்

2021 ஆம் ஆண்டு செலவினமாக கணக்கிடப்பட்டிருந்த ரூபா 2,027,517 பெறுமதியான ஒரு காசோலை 2022 யூன் 04 ஆந் திகதிய வரைவு அறிக்கையின் பதிலின் படி கொடுப்பனவிற்குரிய நபர்களிற்கு விநியோகிக்கப்படாது மாவட்டச் செயலகத்தில் காணப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிதிப்பிரமாணத்திற்கு மாறாக காசோலைகளை கையளித்தல்

மாவட்டச் செயலகத்தினால் கொடுப்பனவிற்காக வரையப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா 5,432,967 பெறுமதியான 59 எண்ணிக்கையான காசோலைகள் கொடுப்பனவு உத்தியோகத்தரால் கொடுப்பனவிற்கு உரிய நபரிடம் கையளிக்கப்பட வேண்டியிருந்தும் உரிய நபர்களுக்கு காசோலைகள் கையளிக்கப்படாது காசோலை விநியோக பதிவேட்டில் (Cheque issuing Register) விடயத்திற்கு பொறுப்பான அலுவலர்களினால் சிற்றொப்பம் இடப்பட்டு காசோலைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தமையானது நிதிஒழுங்கு விதி 260(1) மற்றும் 389(அ) இற்கு மாறான விடயமாக கணக்காய்வில் சுட்டிக்காட்டப்படுகின்றது.

(இ) பிரதேச செயலகங்களினால் 31.12.2021 ஆம் திகதி வரை ரூபா 5,235,406 பெறுமதியான 10 காசோலைகள் வேலை முடிவுற்றதாக குறிப்பிடப்பட்டு வரையப்பட்ட போதும் கணக்காய்வு தினம் வரை குறிப்பிட்டவர்களுக்கு வழங்கப்படாமல் பிரதேச செயலகங்களில் உள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது. இதனால் அரச நிதி வினைத்திறனான முறையில் பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் நிதி ஒழுங்கு விதிகள் 137 மற்றும் 138 இற்கு முரணாக செயற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது.

(ச) மாவட்ட செயலகத்தினால் 2021 ஆம் ஆண்டில் டிசம்பர் மாதத்தில் கொள்வனவு கட்டளை வழங்கப்பட்ட ரூபா 2,344,614 பெறுமதியான பொருட்கள் கணக்காய்வு திகதி வரை (2022.03.15) மாவட்டச் செயலகத்தினால் பெற்றுக்கொள்ளப்படாததுடன் பெற்றுக்கொள்ளப்படாத பொருட்களிற்காக 31.12.2021 ஆம் திகதி உறுதிச்சீட்டுக்கள் தயாரித்து காசோலை வரையப்பட்டமை நிதி ஒழுங்கு விதி 137 மற்றும் 138 இற்கு முரணான விடயமாக அவதானிக்கப்பட்டுள்ளதுடன் பெற்றுக்கொள்ளப்படாத பொருட்களுக்கு கிடைத்த பொருள் பட்டியல் (GRN) எழுதப்பட்டுள்ளமை முரணான விடயமாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

(ஊ) 2022 ஜனவரி மாத வங்கி இணக்கக் கூற்றில் மாற்றப்படாத காசோலையாக காட்டப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பாக நிதி ஒழுங்கு விதி 141 (3) அ, ஆ விற்கு அமைய கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு கையளிக்கப்பட்ட பொறுப்புக்கள் நிறைவேற்றி இருக்காமல் ரூபா 18,632,707 பெறுமதியான 73 எண்ணிக்கையான காசோலைகள் வரையப்பட்டமையானது மெய்மையாய்வின் போது கண்டறியப்பட்டதுடன் 1 ஆம் மற்றும் 2 ஆம் தரப்பினரின் கையொப்பங்கள் காசோலையில் காணப்பட்டிருக்காமை நிதி ஒழுங்கு விதிக்கு முரணான விடயமாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றல்

3.1.1 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

பிரதேச செயலகங்களினால் ரூபா 20,896,902 பெறுமதியான 11 வேலைத்திட்டங்கள் 2021 திசெம்பர் மாதம் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டிய போதும் அறிக்கையிடும் திகதி வரை வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

3.1.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 உள்நாட்டு நிதி ஈடுபடுத்தப்பட்டுள்ள செயற்திட்டங்கள்

3.2.1. ஒப்பந்த நிர்வாகம்

(அ) தங்களால் 2021 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட சௌபாக்கியா உற்பத்தி கிராமிய வேலைத்திட்டத்தின் கீழ் மூன்று பாலம் நிர்மாணிப்பதற்காக (Construction of box culvert) பொது முகாமையாளர், பு'நகரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கத்திற்கும் பு'நகரி பிரதேச செயலாளருக்கும் இடையே ரூபா 2,695,847 பெறுமதியில் 01 டிசம்பர் 2021 தொடக்கம் 28.02.2022 வரையான காலப்பகுதியில் (ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட திகதியில் இருந்து 03 மாதங்களுள்) வேலை நிறைவேற்றலுக்கான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இவ் ஒப்பந்தமானது சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய , சுயதொழில், மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் SMS/SDB/CIO/ General இலக்க 07.07.2021 ஆம் திகதிய கடிதத்தின் பந்தி 3 மற்றும் பந்தி 6 இற்கு முரணாக 2021 ஆம் ஆண்டில் ஒப்பந்தம் முடிவுறுத்தப்படாது 2022 பெப்ரவரி 28 வரை பிரதேச செயலாளரினால் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளமை அங்கிகரீக்கப்படாத ஒப்பந்தமாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

(ஆ) பிரதேச செயலகங்களில் மேற்கொள்ளப்பட்ட 03 எண்ணிக்கையான வேலைத்திட்டங்கள் ஒப்பந்த காலத்தில் நிறைவேற்றப்பட்டிராமைக்கு ரூபா 164,166 காலதாமத தண்ட அறவீடுகள் ஏற்பட்டிருந்தும் ஒப்பந்ததாரரிடமிருந்து அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 2021 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட சௌபாக்கியா உற்பத்தி கிராம வேலைத்திட்டம் மற்றும் இரண்டு லட்சம் (200,000) சமுர்த்தி குடும்பங்களை மையமாகக் கொண்ட பு'ரணத்துவமான வதிவிட மனைப்பொருளாதாரம் ஒன்றினை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டங்களின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்குவதற்காக ரூபா 338,260 பெறுமதியான காசோலை வரையப்பட்டு 10 வகையான பொருட்களுக்கு கொள்வனவு கட்டளை அனுப்பப்பட்டிருந்த போதிலும் 24.01.2022 ஆம் திகதிய நேரடிக் களப்பரீட்சிப்பின் போது குறித்த பொருட்கள் கிடைக்கப்பெற்றிருக்காததுடன் பயனாளிகளுக்கும் வழங்கப்பட்டிருக்காமையும் அவதானிக்கப்பட்டது.

(ஈ) பு'நகரி பிரதேச செயலகத்தினால நடைமுறைப்படுத்தப்பட்ட ஒரு கிராமசேவகர் பிரிவிற்கு ஒரு கிராமிய கைத்தொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்குவதற்காக ரூபா 4,175,929 பெறுமதியான 13 வகையான பொருட்களுக்கு கொள்வனவு கட்டளை அனுப்பப்பட்டிருந்த போதிலும் 30.03.2022 ஆம் திகதிய நேரடிக் களப்பரீட்சிப்பின் போது குறித்த பொருட்கள் கிடைக்கப்பெற்றிருக்காததுடன் பயனாளிகளுக்கும் வழங்கப்பட்டிருக்காமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது.

3.2.2 செயற்திட்டத்தின் சொத்துக்களின் குறைப்பயன்பாடு

(அ) மீள்குடியேற்றம் புனர்வாழ்வளிப்பு வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் நிதியின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட உற்பத்தி கூட்டுறவு கருத்திட்டத்தில் வழங்கப்பட்ட உபகரணங்கள் மற்றும் அமைக்கப்பட்ட கட்டடங்களின் பயன்பாடுகளை அவதானித்த போது ரூபா 20,295,071 பெறுமதியான கட்டடங்களும் உபகரணங்களும் 3 – 4 வருடங்களாக பயன்பாடின்றி காணப்படுகின்றது.

(ஆ) பிரதேச செயலகங்களில் கட்டப்பட்ட ரூபா 21,552,983 பெறுமதியான பிரதேச செயலர் விடுதிகள் 15 -20 மாதங்கள் பயன்பாடின்றி காணப்படுகின்றன.

(இ) கண்டாவளை பிரதேச செயலகத்தில் 04 வாகனங்கள் பாவனையின்றி நீண்டகாலமாக அலுவலகத்தில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளதுடன் இவற்றின் உரிமைத்தன்மையை பிரதேச செயலகத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கைகள் பொறுப்பு வாய்ந்த அதிகாரியினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.3 பெறுகைகள்

மீளாய்வாண்டில் மாவட்டச் செயலக பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத ரூபா 5,388,450 பெறுமதியான 04 வேலைகள் நிறைவேற்றப்பட்டிருந்தன.

3.4 **கடப்பாடுகளும் பொறுப்புக்களும்**

மீளாய்வாண்டின் போது ரூபா 3,156,060 பெறுமதியான வேலைத்திட்டங்களிற்கான கட்டுநிதி கிடைக்கப் பெறாமையால் நிறைவேற்றப்பட்ட மூலதன வேலைக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ள முடியாமல் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளாக ரூபா 3,156,060 பெறுமதி காணப்படுகின்றது.

3.5 **நட்டங்களும் சேதங்களும்**

(அ) இழப்புக்கள் பதிவேட்டின் பிரகாரம் கீழ்குறிப்பிடும் வாகனங்களின் விபத்து தொடர்பான விபரங்கள் இற்றை வரை பூரணப்படுத்தப்படாது இருப்பதனால் நிதிக்கூற்றில் நட்டம் மற்றும் கைவிடுதல் பற்றிய கூற்றில் (Note i) காட்டப்பட்ட ரூபா 84,431,466 பெறுமதியை கணக்காய்வில் ஏற்று உறுதிப்படுத்த முடியாதுள்ளது.

(ஆ) ஒரு வாகனம் 02.03.2021 ஆம் திகதி விபத்துக்குள்ளாகி Break Light உடைந்தமை தொடர்பாக விசாரணையை மேற்கொள்வதற்காக 08.03.2021 ஆம் திகதி விசாரணைக் குழு நியமிக்கப்பட்ட போதும் அறிக்கையிடும் திகதி வரை விசாரணை மேற்கொண்டு இழப்பின் தன்மையை அறவிடுவதற்கும் பொறுப்பின் தன்மையை நிலைநாட்டுவதற்கும் உரிய நடவடிக்கைகள் ஒரு வருடத்திற்கு மேலாக மேற்கொள்ளப்படாமல் இருப்பது முகாமையின் வினைத்திறனற்ற செயற்பாடாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

3.6 **தீர்வு செய்யப்படாத கணக்காய்வு பந்தி**

கணக்காய்வாளர் தலைமையதிபதியின் 30.07.2015 ஆம் திகதிய NN/KN/DS/MR/2014 இலக்க முகாமைத்துவ அறிக்கையின் பந்தி 6.12(a) இன் நெல் கொள்வனவு முற்பணமாக வழங்கப்பட்ட ரூபா 700,000 கடந்த 08 வருடங்களுக்கு மேலாக அறவீடு செய்யப்படாதுள்ளது.

4. நிலைபேறான அபிவிருத்தி

4.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்காணல்

(அ) மாவட்ட செயலகத்தால் இனங்காணப்பட்டுள்ள நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் அதற்கிணங்க தயாரிக்கப்பட்ட இலக்குகள் நிறுவனத்தின் செயல்நடவடிக்கைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளும் போது உரிய செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கு தேவையான மையப்புள்ளிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

5. நல்லாளுகை

5.1 பொதுமக்களுக்கு சேவைகளை நிறைவேற்றுதல்

(அ) கொவிட் - 19 திட்டத்தின் கீழ் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களின் கொடுப்பனவுக்காக குறைநிரப்பு ஒதுக்கீட்டின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 1,000,000 குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாது மாவட்டச் செயலகத்தினால் திருப்பி அனுப்பப்பட்டமை அவதானிக்கப்பட்டுள்ளது.

(ஆ) சௌபாக்கிய விசேட பொது உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் பத்தாவளை வீதி அமைப்பிற்காக ரூபா 3,000,000 ஒதுக்கீடு செய்யப்பட்ட போதும் ரூபா 912,822 பெறுமதியான மூலப்பொருட்கள் பெற்றுக்கொண்டமைக்காக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதுடன் குறித்த வேலை நிறைவேற்றப்படாமல் ரூபா 2,087,178 ஒதுக்கீடு பயன்படுத்தப்படாமல் பிரதேச செயலகத்தினால் திருப்பி அனுப்பப்பட்டமை அவதானிக்கப்பட்டுள்ளது.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

6. மனிதவள முகாமைத்துவம்

அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்

(அ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கிகரிக்கப்பட்டவாறு கிளிநொச்சி மாவட்டச் செயலகம் மற்றும் 4 பிரதேச செயலகங்களின் 4 வகையான பதவி அணியினருக்கான 25 பதவியினர் வெற்றிடமாகவும் மற்றும் 08 பதவியினர் மேலதிகமாகவும் மீளாய்வாண்டில் இறுதியில் காணப்பட்டிருந்தனர்.

(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களின் இடமாற்றம் தொடர்பாக 06.08.2021 ஆம் திகதியிடப்பட்ட 01/2021 ஆம் இலக்கமிடப்பட்ட அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இணைந்த சேவைகள் சுற்றறிக்கை, 13.09.2021 ஆம் திகதியிடப்பட்ட 18/2021 ஆம் இலக்கம் கொண்ட அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை என்பவற்றுக்கு முரணாக மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் 05 வருடங்களுக்கு மேலாக இடமாற்றம் இன்றி 181 அரசாங்க உத்தியோகத்தர்கள் ஒரே சேவை நிலையத்தில் தொடர்ந்தும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ரி.பி.எம்.குமானாயக
சிரேஸ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பதிலாக

04. செயலாற்றுகைச் சுட்டிகள்

- 200 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவி வழங்கல்.
- 25000 குடும்பங்களுக்கு சமுர்த்தி கொடுப்பனவு வழங்கல்.
- 5400 குடும்பங்களுக்கு நலனுதவிக் கொடுப்பனவு வழங்கல்.
- 3000 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சத்துணவுப் பொதிவழங்கல்.
- 350 சிறுநீரக நோயாளர்களுக்கான கொடுப்பனவு வழங்கல்.
- 150 மலசலகூடங்கள் அமைத்துக் கொடுத்தல்.
- 750 நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுத்தல்.

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள்

குறியீட்டு சுட்டிகள்	எதிர்பார்த்தவெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையானவெளியீடு		
	100% - 90%	75% - 89%	50% - 74%
200 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவி வழங்கல்.		89%	
25000 குடும்பங்களுக்கு சமுர்த்தி கொடுப்பனவு வழங்கல்.	94.3%		
5400 குடும்பங்களுக்கு நலனுதவிக் கொடுப்பனவு வழங்கல்.	95%		
3000 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சத்துணவுப் பொதிவழங்கல்.			71%
350 சிறுநீரக நோயாளர்களுக்கான கொடுப்பனவு வழங்கல்		84.6%	
150 மலசலகூடங்கள் அமைத்துக் கொடுத்தல்.		76%	
750 நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுத்தல்.	80%		

5. பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்

5.1. அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்

இல	இலக்குகள்	
1	இலக்கு - 1	வறுமையின்மை
2	இலக்கு - 2	பட்டினியின்மை
3	இலக்கு - 3	சிறந்த சுகாதாரமும் உடல் ஆரோக்கியமும்
4	இலக்கு - 4	தரமான கல்வி
5	இலக்கு - 5	பாலின பாகுபாடின்மையை உருவாக்குதல்
6	இலக்கு - 6	தூய்மையான நீர் சுகாதார வசதிகள்
7	இலக்கு - 8	கௌரவமான வேலையும் பொருளாதார வளர்ச்சியும்
8	இலக்கு - 9	வளர்ச்சிக்கான உட்கட்டமைப்பு உற்பத்தி கண்டுபிடிப்பு
9	இலக்கு -10	நாடுகளுக்குள்ளேயும் நாடுகளுக்கிடையேயுமான சமத்துவமின்மையை ஒழித்தல்
10	இலக்கு -11	நிலைபேறான நகரங்களையும் குடியிருப்புக்களையும் உருவாக்கல்
11	இலக்கு -13	காலநிலைக்கான செயற்பாடுகள்
12	இலக்கு -15	சுற்றுச்சூழலை பாதுகாத்தல்

5.2. பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்கள் நிலைபேறான அபிவிருத்தி செயற்திறன்கள்

இலக்கு/ குறிக்கோள்	அடைவுகள்	குறிகாட்டிகள்	முன்னேற்றம்		
			0% - 49%	50 % - 74 %	75%- 100%
இலக்கு -1 வறுமையின்மை					
வறுமையை ஒழிப்பதற்கான வாழ்வாதார உதவிகளை வழங்கல்	178 பயனாளிகளுக்கு விவசாயம் கால்நடை வளர்ப்புக்கான வாழ்வாதாரம் வழங்கி வைக்கப்பட்டது.	பயனாளிகளின் எண்ணிக்கை			✓
சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை ஊக்குவித்தல்	சிறு தொழில் முயற்சி தொடர்பான தொழிநுட்ப பயிற்சிநெறி கரைச்சி,பூநகரி பிரதேச செயலக பிரிவுக்குற்பட்ட தெரிவு செய்யப்பட்ட 55 தொழில் முயற்சியாளர்களுக்கு நடாத்தப்பட்டது.	பயனாளிகளின் எண்ணிக்கை		✓	
தானிய பயிர்ச்செய்கை உற்பத்தி திட்டத்தை முன்னெடுத்தல்	4 பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள 1529 பயனாள்களுக்கு பயறு, உழுந்து வழங்கி வைக்கப்பட்டது.	பயனாளிகளின் எண்ணிக்கை	✓		
சமூர்த்தி உதவி பெறுவோரை உயர்த்துதல்	23571 சமூர்த்திபயனாளிகள்பயன்பெற்றுள்ளனர்.	பயனாளிகளின் எண்ணிக்கை			✓
வறுமையை குறைத்தல்	முதியோர் கொடுப்பனவு 3822 பயனாளிகளுக்கும்,அங்கவீனமுற்ற நபர்களுக்கான கொடுப்பனவு 1283 பயனாளிகளுக்கும் வழங்கப்பட்டது.	பயனாளிகளின் எண்ணிக்கை			✓
இலக்கு-2 பட்டினியின்மை					

வீட்டுத்தோட்டம் மற்றும் உற்பத்தி முயற்சிகளை அதிகரித்தல்	402 பயனாளிகளுக்கு முருங்கை நிலக்கடலை உற்பத்தி மற்றும் மரக்கறி பயிர் வழங்கி வைக்கப்பட்டது.	பயனாளிகளின் எண்ணிக்கை		✓	
ஆரோக்கியமான குழந்தை வளர்ப்பு	6 இரட்டைக் குழந்தைகளுக்கான கொடுப்பனவு வழங்கப்பட்டது	குழந்தைகளின் எண்ணிக்கை			✓
போசாக்கு நிகழ்ச்சித் திட்டத்தினை ஆரம்பித்தல்	2141 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சத்துணவுப் பொதி வழங்கப்பட்டது	கர்ப்பிணித் தாய்மார்களின் எண்ணிக்கை		✓	
இலக்கு-3 சிறந்த சுகாதாரமும் உடல் ஆரோக்கியமும்					
உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தல்	நோயினால் பாதிக்கப்பட்ட 15 சிறுவர்களுக்கான சிகிச்சைக்கான உதவி வழங்கி வைக்கப்பட்டது.	சிறுவர்களின் எண்ணிக்கை			✓
தொற்றும் மற்றும் தொற்றாத நோய்கள் தொடர்பாக கவனம் செலுத்துதல்	296 சிறுநீரக நோயாளர்களுக்கான கொடுப்பனவு வழங்கப்பட்டது	கொடுப்பனவு வழங்கப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை			✓
இலக்கு - 4 தரமானகல்வி					
மாணவர்களின் இடைவிலகல் எண்ணிக்கையை குறைத்தல்	வறுமையின் காரணமாக பாடசாலைகளிலிருந்து இடைவிலகிய 24 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி மீளிணைக்கப்பட்டனர்.	மாணவர்களின் எண்ணிக்கை		✓	

மாணவரகளின் கல்விக்கான ஊக்;குவிப்பு வழங்கல்	தனிப்பெற்றோரைக் தலைவராகக் கொண்ட 40 மாணவர்களுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்பட்டது.	மாணவர்களின் எண்ணிக்கை		✓	
தொழிற்கல்வியினை வழங்குதல்	சாதாரணதர மற்றும் உயர்தர மாணவர்களுக்கான 51 தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன	நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	✓		
இலக்கு-5 பாலின பாகுபாடின்மையை உருவாக்குதல்					
பெண்களுக்கெதிரான வன்முறையை இல்லாது ஒழித்தல்	பெண்களுக்கெதிரான வன்முறை எதிர்ப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டது.	நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை			✓
இலக்கு-6 தூய்மையானநீர், சுகாதாரவசதிகள்.					
மலசலகூடகட்டிடங்களின் வசதிகளைஅதிகரித்தல்	114 மலசலகூடங்கள் அமைத்து கொடுக்கப்பட்டன	மலசல கூடங்களின் எண்ணிக்கை		✓	
இலக்கு-8 கௌரவமான வேலையும் பொருளாதார வளர்ச்சியும்					
வேலையின்மையை குறைத்தல்	வேலை வாய்ப்பில் ஈடுபடும் அங்கவீனமுற்ற 40 நபர்களுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்பட்டது	பயனாளிகளின் எண்ணிக்கை	✓		
தொழில் முயற்சியினை ஊக்குவித்தல்.	4 பிரதேச செயலக பிரிவுகளுக்குட்பட்ட 44 பயனாளிகளுக்கு தையல் பயிற்சிநெறி வழங்;கப்பட்டது.	பயனாளிகளின் எண்ணிக்கை			✓

சுயதொழில் முயற்சியாளர்களை ஊக்குவித்தல்	18 சுயதொழில் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.	நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை			✓
தொழில்வாய்ப்பினைப் பெற்றுக் கொடுத்தல்	மாவட்டதொழில் சந்தை நிகழ்ச்சி (மாற்றுத்திறனாளிகளின்) நடாத்தப்பட்டது - 01	நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை			✓
இலக்கு-9 வளர்ச்சிக்கான உட்கட்டமைப்பு உற்பத்தி கண்டுபிடிப்பு					
உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்	4 பிரதேச செயலாளர் பிரவுகளிலும் பொது உட்கட்டமைப்பு வசதியை அபிவிருத்தி செய்தல்	வேலைத் திட்டங்களின் எண்ணிக்கை	✓		
இலக்கு-10 நாடுகளுக்குள்ளேயும் நாடுகளுக்கிடையேயுமான சமத்துவமின்மையை ஒழித்தல்.					
மதங்களுக்கிடையிலான வேற்றுமையை ஒழித்தல்.	4 பிரதேச செயலக பிரிவுகளிலிருந்து 150 பேர் பங்கு பற்றல் - 2 வேலைத்திட்டங்கள்	வேலைத் திட்டங்களின் எண்ணிக்கை		✓	
இலக்கு-11 நிலைபேறானநகரங்களையும்குடியிருப்புக்களையும்உருவாக்கல்					
மனித குடியேற்ற வசதிகளை அதிகரித்தல்	480 வீடுகள் அமைத்து கொடுக்கப்படபட்டன.	அமைத்து கொடுக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை			✓
பேரிடர் அபாயத்தை குறைப்பதில் முதலீடு செய்தல்	வெள்ளத்தால் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களை பாதுகாப்பதற்கான தணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன	தணிப்பு நடவடிக்கைகளின் எண்ணிக்கை	✓		
இலக்கு-13 காலநிலை செயற்பாடு					
அனர்த்த தணிப்பு விழிப்புணர்வு செயற்பாடு	பாதிக்கப்படக்கூடிய சமூகங்களுக்கு முற்கூட்டிய நடவடிக்கை தொடர்பாக அறிவு மற்றும் திறனை மேம்படுத்த விழிப்புணர்வு	விழிப்புணர்வு செயற்பாடுகளின் எண்ணிக்கை	✓		

	செயற்பாடு நடாத்தபபட்டது.				
இலக்கு-15 சுற்றுச்சூழலை பாதுகாத்தல்					
சுற்றுச்சூழலையும் உயிர்வளங்களையும் பாதுகாத்தல்	அக்கராயான் ஆறு மற்றும் அதன் சூழற்தொகுதியை பாதுகாக்கும் செயற்திட்டம் - *01*	வேலைத் திட்டங்களின் எண்ணிக்கை	✓		

06. மனித வள விபரம்

6.1 பதவியணி முகாமைத்துவம்

மாவட்ட செயலகம்

பதவி நிலை	அங்கீகரிக்கப்பட்டப தவியணி	தற்போதுள்ள பதவியணி	பதவி வெற்றிடம்
சிரேட்ட	13	11	2
மூன்றாம் நிலை	4	2	2
இரண்டாம் நிலை	78	125	(47)
ஆரம்ப நிலை	28	22	6

பிரதேச செயலகங்கள்

பதவி நிலை	அங்கீகரிக்கப்பட்டப தவியணி	தற்போதுள்ள பதவியணி	பதவி வெற்றிடம்
சிரேட்ட	16	16	0
மூன்றாம் நிலை	16	7	9
இரண்டாம் நிலை	347	308	39
ஆரம்ப நிலை	34	29	5

6.2. பற்றாக்குறையான மனித வளங்கள்

மனிதவள பற்றாக்குறை காரணமாக வேலைகளை அலுவலர்களிடையே பகிர்ந்தளிப்பது சிரமங்கள் ஏற்படுவதுடன் வேலைகளில் தாமதங்களும் ஏற்படுகின்றன. இதனால் கூடுதலான மேலதிக நேரக்கொடுப்பனவுக்கு அதிகநிதி ஒதுக்கீட்டினை பயன்படுத்தப்பட வேண்டியுள்ளது.

6.3. மனித வள அபிவிருத்தி

இல	நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	பயிற்றப்பட்ட பதவியினர் எண்ணிக்கை	நிகழ்ச்சித் திட்டக் காலம்	மொத்தமுதலீடு (ரூபா)		நிகழ்ச்சித்திட்டத்தின்இயல்பு (உள்நாட்டு / வெளிநாட்டு)	வெளியீடு/ பெற்றுக்கொண்ட அறிவு
				உள் நாட்டு	வெளி நாட்டு		
01	இலங்கையில் தற்போதைய வளர்ச்சிக் கொள்கைகள்	60	02 நாட்கள்	24142		268-01-1-2401	பாடம்தொடர்பான அறிவு
02	பெறுகை நடைமுறைகள்	60	02 நாட்கள்	22970		268-01-1-2401	பாடம்தொடர்பான அறிவும் பயிற்சியும்
03	திட்டமிடல் நுட்பங்கள், திட்டமிடல் கருத்துக்கள்	60	02 நாட்கள்	18465		268-01-1-2401	பாடம்தொடர்பான அறிவு
04	வாடிக்கையாளர் பராமரிப்பு மற்றும் சேவைகள் சிறப்பு	01	01 நாள்	3,500		268-01-1-2401	பாடம்தொடர்பான அறிவும் பயிற்சியும்
05	தகவல்தொடர்பு திறன் மற்றும் விளக்கக் காட்சிக்கா	50	02 நாட்கள்	28,415		268-01-1-2401	பாடம்தொடர்பான அறிவு

	ன ஸ்லைடுக ளை வடிவமைத் தல்						
06	தகவல் தொடர்பு தொழில்நு ட்பம் (MS Office)	95	03 நாட்கள்	46,466		268-01-1-2401	பாடம்தொடர்பா ன அறிவும் பயிற்சியும்
07	தகவல் தொழில்நு ட்ப பயிற்சியில் சான்றிதழ் (Online)	01	10 நாட்கள்	18,500		268-01-1-2401	பாடம்தொடர்பா ன அறிவு
08	வேலை வாய்ப்பு பயிற்சிக்கா ன ஆங்கிலத் தில் சான்றிதழ் (Online)	01	10 நாட்கள்	18,500		268-01-1-2401	பாடம்தொடர்பா ன அறிவு
09	முறையான கடிதம் எழுதுதல் (Online)	01	01 நாள்	5,000		268-01-1-2401	பாடம்தொடர்பா ன அறிவு
10	அறிக்கை எழுதும் திறன் (Online)	01	01 நாள்	5,000		268-01-1-2401	பாடம்தொடர்பா ன அறிவு
11	அலுவலக நடைமுறை கள், கணக்கீட் டு நடைமுறை கள்,	50	01 நாள்	12,050		268-01-1-2401	பாடம்தொடர்பா ன அறிவு

12	தகவல் தொடர்பு தொழில்நுட்பம் (MS Office)	50	02 நாட்கள்	19,000		268-01-1-2401	பாடம்தொடர்பான அறிவும் பயிற்சியும்
13	திட்டமிடல் முகாமைத்துவம்,திட்டமிடல் நுட்பங்கள், திட்டமிடல் கருத்துக்கள்	80	02 நாட்கள்	28,060		268-01-1-2401	பாடம்தொடர்பான அறிவு
14	அலுவலக நடைமுறைகள், கணக்கீட்டு நடைமுறைகள்	70	02 நாட்கள்	27,450		268-01-1-2401	பாடம்தொடர்பான அறிவு
15	அலுவலக நடைமுறைகள், கணக்கீட்டு நடைமுறைகள்	50	02 நாட்கள்	24,100		268-01-1-2401	பாடம்தொடர்பான அறிவு
16	மேம்பாட்டுத் திட்டப் பயிற்சித் திட்டத்தின் வவுச்சர்களைக் கவனியுங்கள்	60	01 நாள்	21,400		268-01-1-2401	பாடம்தொடர்பான அறிவு
17	தகவல் தொடர்பு தொழில்நுட்பம்(MS	60	02 நாட்கள்	36,650		268-01-1-2401	பாடம்தொடர்பான அறிவும் பயிற்சியும்

	Word, Excel)						

இது அலுவலர்களுக்கிடையிலான மனித வளத் திறன் விருத்தி வழிகாட்டல் செயற்பாடுகள் ஆகும்.

மாவட்டச் செயலக பயிற்சி அலகின் ஊடாக பல்வேறு வகையான பயிற்சி வகுப்புக்களை மாவட்டச் செயலக மற்றும் பிரதேச செயலக அலுவலர்களின் செயற்றிறன்களை விருத்தி செய்யும் நோக்கில் திட்டமிட்டு வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளோம்.

அத்துடன் ஒவ்வொரு பயிற்சி வகுப்பிலிருந்தும் பெறப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையிலும் அவ் அலுவலர்களின் கிளைத் தலைவர்களிடமிருந்தும் அலுவலர்களிடமிருந்தும் பெறப்படும் இடைவெளி மதிப்பீட்டின் அடிப்படையிலும் பயிற்சிச் செயலமர்வுகள் திட்டமிடப்பட்டு நடாத்தப்படுகின்றமை எமது வெற்றிகரமான அடைவுகளில் ஒன்றாக உள்ளது.

07. இணக்கப்பாட்டு அறிக்கை

இல	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலமை	இணக்கமற்றதாயின் சுருக்கமாக விளக்குக	எதிர்காலத்தில் இணக்கமற்றதனை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையானது
1	**பின்வரும் நிதி அறிக்கைகள் /கணக்குகள் உரிய திகதிகளில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன**			
1.1	வருடாந்த நிதி அறிக்கைகள்	உரிய திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டது		
1.2	அரச அலுவலர்கள் முற்பணக்கணக்கு	உரிய திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டது		
1.3	வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் வர்த்தக முற்பணக்கணக்குகள்			
1.4	களஞ்சிய முற்பணக்கணக்கு			
1.5	சிறப்பு முற்பணக்கணக்கு			
1.6	ஏனைய			

2	**புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி.பி445)**	பேணப்படுகின்றது		
2.1	பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன் படி நிலையான சொத்து பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	பேணப்படுகின்றது		
2.2	ஆள்சார் வேதனாதிகள் பதிவு/ தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	பேணப்படுகின்றது		
2.3	கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	பேணப்படுகின்றது		
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	பேணப்படுகின்றது		
2.5	அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (சிகாஸ்) தயார் செய்து பொது திறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல்	உரிய திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டது		
2.6	காசோலை மற்றும் காசுக்கட்டளை பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	பேணப்படுகின்றது		
2.7	பொருட் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	பேணப்படுகின்றது		
2.8	இருப்புப் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	பேணப்படுகின்றது		
2.9	இழப்புப் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	பேணப்படுகின்றது		
2.10	பொறுப்புப் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	பேணப்படுகின்றது		
2.11	அடிக்கட்டை புத்தகங்களின் (GAN-20) புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	பேணப்படுகின்றது		
3	**நிதிக்கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி135)**	பேணப்படுகின்றது		

3.1	நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டுள்ளன.	ஆம்		
3.2	நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் தெரியப்படுத்தப்பட்டது	ஆம்		
3.3	ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது	ஆம்		
3.4	2014.05.11 திகதிய அரச கணக்கு சுற்றறிக்கை இல:171/2004ன்படி அரசுஊதியமென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளரின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை	ஆம்		
4	**வருடாந்த திட்டத்தினைத் தயாரித்தல்**	உரிய திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டது		
4.1	வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரித்தல்	உரிய திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டது		
4.2	வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரித்தல்	உரிய திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டது		
4.3	வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல்	உரிய திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டது		
4.4	வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அதை தேசிய வ.செ.தி திணைக்களத்துக்கு உரிய திகதிகளில் சமர்ப்பிக்கப்படுகின்றது	உரிய திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டது		
4.5	வருடாந்த காசுப்பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு உரிய திகதிகளில் சமர்ப்பிக்கப்படுகின்றது	உரிய திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டது		

5	**கணக்காய்வு வினாக்கள்**	உரிய திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டது		
5.1	அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு குறிப்பிட்ட திகதிகளில் பதில் அளிக்கப்பட்டுள்ளது	உரிய திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டது		
6	**உள்ளக கணக்காய்வு**			
6.1	நி.பி 134 (2) டி.எம.ஏ1-2019 படி ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரித்தல்	ஆம்		
6.2	அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல்	உரிய திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டது		
6.3	அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் துணைப்பிரிவு 40 (4) இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்	உரிய திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டது		
6.4	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134(3)நிதிப் பிரமாணக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு வழங்குதல்	உரிய திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டது		
7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**			
7.1	டி எம் ஏ 1-2019 சுற்றறிக்கையின் படி ஆண்டுக்குக் குறைந்தது 04 கணக்காண்டு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.	ஆம்		

8	**ஆதன முகாமைத்துவம்**	பேணப்படுகின்றது		
8.1	ஆதன முகாமைத்துவ சுற்றிக்கை இல01/2017 சொத்துப்பெறுகை முற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டும்.	பேணப்படுகின்றது		
8.2	மேற்கண்ட சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின்படி சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும் அத்தகைய அதிகாரியை கம்ப்ரோலர் ஜனரல் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் பொருத்தமானதொரு தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.	பேணப்படுகின்றது		
8.3	அரச நிதி சுற்றறிக்கை இல 05/2016 இன் படி பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு உரிய திகதிகளில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	உரிய திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டது		
8.4	சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியான குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன.	இல்லை		
8.5	நி.பி772 இன்படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றது.	ஆம்		
9	**வாகன முகாமைத்துவம்**			
9.1	குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து	பேணப்படுகின்றது		

	அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்			
9.2	கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும்.	பேணப்படுகின்றது		
9.3	வாகன பதிவு புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல்வேண்டும்.	பேணப்படுகின்றது		
9.4	ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி 103, 104, 109 மற்றும் 110 இன் படி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.	பேணப்படுகின்றது		
9.5	2016.12.29 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல 2016/30 இன் பத்தி 3.1 இன் விதிகளின்படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல்	பேணப்படுகின்றது		
10	**வங்கிக் கணக்குகளின் முகாமை**			
10.1	உரிய திகதிகளில் வங்கிக் கணக்கிணங்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றழித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல்	உரிய திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டது		
10.2	மீளாய்வு வருடத்தில் காணப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகளினைத் தீர்த்தல்	பொருத்தமற்றது		
10.3	வங்கிக் கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்படவேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்தல் மற்றம் சரிசெய்தல் மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைகளை தீர்த்தல்	உரிய திகதியில் என்னால்சீர் செய்யப்பட்டது		
11	**நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்.**	பேணப்படுகின்றது		

11.1	ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல்	பேணப்படுகின்றது		
11.2	நி.பி 94(1) இன் படி ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும்	பேணப்படுகின்றது		
12	**அரச அலுவலர்களின் முற்பணப்பணக்கு**			
12.1	எல்லைகளுக்கு இணங்குதல்	பேணப்படுகின்றது		
12.2	நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திருத்தல்	பேணப்படுகின்றது		
12.3	ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை அடைத்தல்	ஆம்		
13	**பொது வைப்புக்கணக்கு**			
13.1	காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுவதற்கு நி.பி 571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்	ஆம்		
13.2	பொது வைப்புக்களுக்கான கட்டுப்பாட்டு கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	பேணப்படுகின்றது		
14	**முற்பணக்கணக்கு**	பேணப்படுகின்றது		
14.1	மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப்புத்தகத்தின் மீதி திறைசேரி செயற்பாட்டுத்திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது	உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டது		
14.2	நி.பி 371 இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல்,அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள் தீர்க்கப்படும்	உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டது		
14.3	நி.பி 371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை			

	மீறாத தற்காலிக இடைக்கால வழங்கல்			
14.4	மாதந்தோறும் திறைசேரி புத்தகங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்படுதல்வேண்டும்.	பேணப்படுகின்றது		
15	**வருமானக்கணக்கு**			
15.1	விதிகளின்படி சேகரிக்கப்பட்ட வருமானத்தை திருப்பி செலுத்தியிருக்க வேண்டும்	ஆம்		
15.2	திரட்டப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்படவேண்டும்	ஆம்		
15.3	நி.பி 176 இன் படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்திற்குச் சமர்ப்பித்தல்	ஆம்		
16	**மனிதவள முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல்	பேணப்படுகின்றது		
16.2	ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல்	பேணப்படுகின்றது		
16.3	20.09.2017 தேதியிடப்பட்ட எம்.எஸ்.டி சுற்றறிக்கை இல 04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டது		
17	**பொதுமக்களுக்கான தகவல் வழங்கல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல்.**			
17.1	தகவல் உரிமைச்சட்டம் மற்றும் ஒழுங்கு முறைகளின்	பேணப்படுகின்றது		

	அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்தல்			
17.2	அமைப்பு பற்றிய தகவல்களை அதன் வலைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொதுக்கருத்துக்கள்/குற்றச்சாட்டுக்களை எளிதாக்குதல்.	ஆம்		
17.3	தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் 8 மற்றும் 10 பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல்.	ஆம்		
18	**பிரசைகள் பட்டயத்தினைச் சமர்ப்பித்தல்**	ஆம்		
18.1	பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல 05/2018(1) இன் படி பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்தல்	ஆம்		
18.2	சுற்றறிக்கையின் பந்தி 2.3 ஐப் பொறுத்தவரை பிரசைகள் பட்டயம் பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை செயல்படுத்தவும் அதை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறிமுறையை அமைத்துள்ளது.	ஆம்		
19	**மனிதவளத்திட்டத்தினைத் தயாரித்தல்**			
19.1	2018.01.24 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல 02/2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனிதவளத்திட்டம் தயாரித்தல்.	ஆம்		

19.2	ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்தபட்சம் 12 மணிநேர பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்கும் குறையாமல் இருப்பதை மேற்கண்ட மனிதவளத்திட்டம் உறுதி செய்யவேண்டும்.	ஆம்		
19.3	மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது	ஆம்		
19.4	மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 வது பந்திக்கு எற்ப மனிதவள மேம்பாட்டுத்திட்டம், திறன் மேம்பாட்டுத்திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத்திட்டங்களை செயற்படுத்தல்			
20	**கணக்காய்வு பந்திகளுக்கான பொறுப்புக்கள்**			
20.1	முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு பந்திகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்தல்	சீர்செய்யப்பட்டுள்ளது		